ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6
உள் நாடு 0-1.0

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, — | ,, 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில வரு பங்குனி மீ 10உ (23—3—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 43

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்மம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.

உலகப் பிரசித்தி பெற்ற

## மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய் பனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒருமுறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

## சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலைசெய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாப்பிட மதுரமுள்ளது. 2

ஒரு சேர் டப்பி விலை ரூ. —8—0

## மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பரிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்வதயும். ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடேரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸடு, திருச்சினாப்பள்ளி

# தாது புஷ்டியில் மன்மதனுக்கு ஒப்பாவீர்கள்

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடைய
வேண்டுமானல் பழனி, ஆர் எம் கே

# தங்க பஸ்பம்

## நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்

### தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை

இது பிரபுக்கள் சாப்பிட வேண்டிய மருந்து மற்றவர்கள் சாப்பிட்டு தாங்க முடியாது:

ஒரே வேளையில் கொடுக்கும் பலனைப் பார்த்தால் உங்கள் மனதை அப்படியே கவரச் செய்து விடுகிறது

### தாது புஷ்டியில் மன்மதனேவென மயங்குவார்கள்

இதிலமைந்திருக்கும் ஓர் ரகசிய அபூர்வ சக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் தெரியும்

இதை காலை மாலை கோய் பலம்போல் 1 அல்லது 2 மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் தாதைக் கட்டி வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்ப வரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச் செய்கிறது. தாதுவைக்கட்டி இல்வாழ்க்கையில் இன்பத்தைக்கொடுத்து பால்யம், யௌவனம். விருத்தாப்பியம் இந்தப் பருவங்களில் அடையவேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யும். கிழத்தனத்தை நீக்கி வல்லமையடையச் செய்வதில் பேர் பெற்றது. நீரழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம். ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், சோகை, கைக்கட்டு, கிரந்தி முதலிய சகலவித கர்ம வியாதிகளும் தீரும். தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும். வீரியத்தைக் கெட்டிப்படுத்தி ஆண்மைக்குறைவை நீக்கி தாது புஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூ. 100. 50 நாளைக்கு ரூ. 50. 25 நாளைக்கு ரூ. 25. சிங்கப்பூர் வாசிகள் சார்ஜுடன் ரூ. 2-ம் சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும்.

### நற்சாக்ஷி

நான் உட்லேண்டு ஸ்டேஷன் மாஸ்டர் மூலமாய் தங்களிடமிருந்து நரசிங்க லேகியமும், தங்க பஸ்பமும் வாங்கி சாப்பிட்டதில் இப்போது புதிய பலம் அடைந்திருக்கிறேன்.

S. Jesudasan Railway Overseer, Woodlands, Singapore

## புத்திர சந்தானம் உண்டாகிவிட்டது.

நற்சாட்சி:—எனக்கு விவாகம் நடந்து ஆறு வருடம் வரை புத்திரசந்தானமில்லாமலிருந்தது. தங்கள் தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் தருவித்து 25 நாட்கள் சாப்பிட்டதில் என் குறைகள் பூராவும் தீர்ந்து புத்திரசந்தானமுண்டாகி விட்டது. இந்த உண்மையை உலகத்தாருக்கு எடுத்தோத முன் வந்திருக்கிறேன். இம்மருந்துகள் தேவ ஔஷதங்கள் என்று சொல்வது மிகையாகாது. சரீர திடத்தையோ, புத்திக்கூர்மையையோ, மனமகிழ்ச்சியையோ மேலாய புத்திரப் பேற்றையோ விரும்பும் ஒவ்வொருவரும் இம்மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டால் நினைத்தது லபிக்குமென்பதே எமது துணிபு. தாங்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ எல்லாம் வல்லபிரான் இன்னருள் புரிவாராக.

(Sd.) நல்லதம்பி, கட்டுப்பட்டை, சிலோன், 22—2—27

### ஒரு அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்

1—9—24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிட்டல் அசிஸ்டெண்ட் சர்ஜன் நமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதைக்கவனியுங்கள்:—அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்கள் தங்க பஸ்பமும் நரசிங்க லேகியமும் இரு நோயாளர்களுக்கு 50 நாட்களுக்குக்கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி சௌக்கியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவராலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100-நாள் தங்கபஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூ. 50க்கு வி. பி. செய்யவும்.

Nagalingam Hospital C/o District Hospital, Kualaselenger.

## வைத்திய ஆசிரியர்:

## ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை

தந்தி விலாசம் "வேலுசாமி" பழனி சித்த் வைத்தியசாலை, பழனி S I Ry

# தென்மாப்பட்டு வைக்கம் வீரர் வாசகசாலையில் நான் கண்ட காட்சி.

கைவல்யம்.

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலுக்கா தென்மாப்பட்டு கிராமம் வைக்கம் வீரர் வாசகசாலை ஆண்டு விழாவின் அழைப்பிற்கு நானும் போயிருந்தேன. இவ்வாசகசாலைக்கு பல பத்திரிகைகள் வருகின்றன. பொது நோக்குடைய பண்டிதர்களால் பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன. மற்ற ஏற்பாடுகளும் கொள்கைகளும் சுயமரியாதை சங்கத்தை அனுசரித்ததேயாகும்.

வாசகசாலையின் அறிக்கை பத்திரத்தில் வாசகசாலையின் அங்கத்தினர்கள் 63 பேர்கள் என்றும் அவர்கள் பெயர்களும் அதில் எழுதப்பட்டிருக்கின்றன. அபிமானிகள் பலர் இருக்கலாம். சைவ சமயம் தோன்றி பல நாளாயும் 63 நாயன்மார்களே இன்று வரையிலுமிருக்கையில் ஒரு வருடத்தில் தோன்றிய வாசகசாலைக்கு 63 பெயர்கள் அதி தீவிர அங்கத்தினர்களாகயிருப்பது போற்றக்கூடியதே யாகும்.

பிறவியில் உயர்வு தாழ்வு இருக்க ஞாயமில்லை என்னும் உண்மையை உணர்த்தி, நாட்டின் ஒழுக்கத்திற்கும் மேன்பாட்டிற்கும் செழிப்பிற்கும் கேடான தீண்டாமை மதுபானம் முதலியவைகளை ஒழித்து, தமிழை அபிவிருத்தி செய்து, பாலர்களின் உடல் நலம் பேணுதற்குரிய பயிற்சிகளை மாணவர்களுக்குப் போதித்து, சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக விருக்கும் வீண் கிரியைச் சடங்குகளை நீக்கி, ஆராய்ச்சி அறிவை விருத்திக்கு கொண்டுவர தக்க அறிஞர்களைக் கொண்டு முன்னேற்ற விஷயங்களைப் பிரசங்கம் செய்வித்து சன சமூகங்களுக்கு கைங்கிரியம் செய்வதே முக்கிய வேலையாக முனைந்து நிற்கும் 63 அங்கத்தினர்களால் அவ்வூரும் அப்பக்கங்களிலுள்ள சனங்களும் முன்னேற்ற மடைந்து விடுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அந்த 63 அங்கத்தினர்களையும் எனக்குத் தெரியாது. நான் தெரிந்துகொண்ட அங்கத்தினர்களின் உழைப்பும் ஊக்கமும், எண்ணமும் அவர்கள் முகத்தின் பிரகாசம் காட்டிக்கொண்டிருந்தன.

எந்த ஆண்டு விழாக்களிலும் நான் கலந்து கொண்டது இதுவே முதற்றடவை. பகல் இரண்டரைமணிக்குத் துவக்கப்பட்ட ஆண்டுவிழா ராத்திரி ஒன்பதரை மணிக்குமுடிவுபெற்றது. அந்த ஏழு மணி நேரமும் அதே இடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டியவனான நானே கடைசியாக வெளியில் வந்து நின்று கொண்டிருந்தேன். ஆணும் பெண்ணும் சேர்ந்த அப்பெரும் கூட்டம் அசையாது கடைசி வரையிலும் அவ்விடமிருந்ததை நினைக்கையில் சுயமரியாதையின் உண்மைத்தத்துவங்கள் அவ்வூரையும் அவ்வூரைச் சுற்றிலுமுள்ள சனங்களையும் கூட்டிப்பிடித்துக் கொள்ளுமென்பதில் சந்தேகமேயில்லை.

இவ்வாசக சாலையின் கொள்கைகளை ஒத்துக் கொள்ளாதவர்களும் அதற்கு இடையூறு விளைவிப்பவர்களுமில்லாமலுமில்லை இவர்கள் அவ்வூரிலுள்ள உயர்ந்த ஜாதியெனப்பட்ட தமிழர்களை சூத்திரனென்றும் சூத்திரனென்றால் தாசி மகன், அடிமை, ஒழுக்கமில்லாதவன், ஆசாரம் கெட்டவன், என்று இந்து சாஸ்திர ஸ்மிருதி இதிகாசங்களால் எழுதப்பட்டு அதையே சிவில் சட்டங்களிலும் ஏற்படுத்தி இருக்கும் இழிவை உணராதவர்கள். நமது கொடுமையால் தாழ்த்தப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் அன்னிய மதங்களுக்குப் போய் அதற்குபின் உயர்ந்த ஜாதி என்று நினைத்துக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கே பகையாய் வருவதின் ஆபத்தை நினைத்துப் பார்த்தவர்களுமல்ல. பார்ப்பானுக்கு சாஸ்திரத்தால் விதித்த ஒழுக்க ஆசாரங்களையெல்லாம் தள்ளி தன் சுகத்திற்கும் லாபத்திற்கும் எதையும் செய்து பினனும் தான் பார்ப்பான் என்றும் தனக்கே சமூகத்தின் உயர்வும் தானதருமமும் உரித்தானதென்றும் கருதி தன் பொய் வேஷத்தால் நடித்து வாங்கிக் கொள்ளும் தானதருமம் ஒரு பிரயோஜனமும் படாததென்பதும் வேதத்தையும் ஒழுக்கத்தையும் தபசையும் கைவிட்ட பார்ப்பானுக்கு கொடுத்த தானம் பலனளிக்காததோடு நில்லாமல் கொடுத்தவன் குடும்பத்தையும் கெடுத்து விடுமென்றும் ஸ்மிருதிகளில் எழுதியிருக்கப்பட்டதையும் உணராதவர்கள். இவைகளை கவனித்துப் பார்த்தார்களேயானல் இவ்வாசக சாலையின் அவசியத்தை உணர்ந்து அவர்களே இவ்வாசகசாலையின் முன்னணியாய் விடுவார்கள் என்பதற்கும் சந்தேகமில்லை.

இருபத்தைய்ந்து வருடங்களுக்கு முன் இவ்வாசக சாலையின் சில பாகங்களை சனசமூகங்களுக்கு எடுத்துச் சொல்ல என்னல் முயர்ச்சி செய்யப்பட்டதாயினும் அப்பொழுது அதைத் திருப்தியோடு கேட்டவர்களும் நினைத்துப் பார்த்தவர்களும் சுருக்கத்திலும் சுருக்கமாகவே யிருந்தார்கள். அதையும் இந்த காலத்தில் இப்பொழுது நடந்த ஆண்டு விழாவின் அங்கத்தினர்களையும், உற்சாகிகளையும், அதில் கலந்து கொண்டவர்களையும் கவனிக்கையில் உலகமாறுதலுக்கேற்றவாறு ஜனங்களின் அறிவும் விர்த்தியாய்க்கொண்டு வருகிறதென்பது எனது பிரத்தியக்ஷ அனுபோகமாகும். தம் புத்தியினல் திறமாகவும், சுயமாகவும் யோசனைகள் செய்யும்படியான நிற்பந்தத்திற்கு சனசமூகம் வந்துவிட்டது. முற்காலத்திய சமூக விதிகளின் கடுமை குறைந்து வருகின்றன. ஜாதிப் பிரிவு முறை இயற்கையிலும் அவசியத்திலு மாறிக் கொண்டே வருகிறது. விதிகளும் சம்பிரதாயஙகளும் அதற்காக ஏர்பட்ட சாஸ்திரங்களும் மனிதனுக்காக ஏற்பட்டவைகள், என்றும் மனிதன் அவைகளுக்காக ஏற்படவில்லை என்றும், ஸ்மிருதிகளைகாலத்திற்குத் தக்கவாறு உபயோகப்படுத்திக் கொள்ளுங்களென்றும் சாஸ்திர நிச்சய முணர்ந்தவர்களால் சொல்லப்படுகின்றன. நமதுதேசத்தின் தற்கால துக்கங்களுக்கெல்லாம்காரணம் இயற்கையமைப்பைத்திருப்பி வைத்தது தானென்றும் பழயபுத்தகங்களென்ற சாயைகளுக்கு அடிமையாக ஜீவனையே அமைத்துக்கொண்டது தானென்றும் சுயமரியாதை சங்கமும சொல்லுகின்றன.

சமயத்தால் பிழைப்பவன், உழைப்பில்லாமல் சத்திரத்திலுண்டுபூரிதெட்சிணை "வாங்கி அவர் இரண்டுமொன்றும் கொடுத்தார்" "அவன் ஒன்றும் அரையும கொடுத்தான்." "இவன் அரையும் காலும் கொடுத்தானே அயோக்கியன்" என்று தெட்சிணைகளைப்பற்றிப் பேசி தின்றுகொழுத்துத் தூற்றித் திரிகிறவர்களும், உயர்ந்த ஜாதி யென்னும் மதிப்பால் தன் லாபத்தை நிலை நிருததிக்கொள்ளுகிறவர்களும் இவர்களால்சூழப்பட்டுஇவர்கள் புகழும் வார்த்தையைக்கேட்டு இவர்கள் கையில் தன் வாழ்க்கை நிரப்பப்படுகிறதென்று நினைக்கும் சிலப் பணக்காரர்கள் ஆகிய இத்தகையார்களின்நிலை இப்பொழுது மாராவிட்டாலும்தன் நம்பிக்கைவரவும் மௌடீகம் நீங்கவும் எற்பட்டால் இவையனைத்தும் நீங்கிவிடும். அதிலும் நீங்காவிட்டால் பணக்காரன் வீடு ஏழையாகியும் சுத்தமௌடீகளின் தேகத்தோடும் ஒழிந்து போகும்.

நமது தேசத்தின் உருவம், நதி, பூமி. காடு, ராஜாங்கம்,, கல்வி, பாஷை நிறம். அமைப்பு, ஊண், உடை முதலியவைகளெல்லாம் மாறிவிட்டன. இப்படிப்பட்ட மாறுந்தன்மையான உலகில் சென்று விட்டகாலத்திய விதிகளையும் சம்பிரதாயங்களையும் நினைத்துக்கொண்டிருப்பது, பிரயோஜனமற்றவையென்பதை யாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனதால் இவ்வாசகசாலையின் உண்மை விளக்கம் பரவி சனசமூகத்திற்கு உதவக் கூடிய அறிகுறிகளே தென்படுகின்றன.

அங்கு நான் கண்ட காட்சிகளில் முக்கியமான தொன்றைச் சொல்லுகிறேன். தென்மாபட்டு வாசகசாலை ஆண்டுவிழாவிற்குப் போகும் மத்தியில் ராமனுதபுரம் ஜில்லா நாச்சியார் புரம் என்னும் கிராமத்தில் உண்மை விளக்க நிலைய குருகுலவளர்ச்சி கல்விச்சாலையின் செயலாளர்களின் அழைப்பிற்குப் போயிருந்தோம். அந்தககல்விச்சாலைவிசாலமான இடத்தில் குருகுல வளர்ச்சிக்குத்தக்கவாறு அமைந்திருக்கிறது. அதில் பல ஜாதி தமிழ் பிள்ளைகள் ஒரு 'தமிழ் ஜாதிப் பையன்கள் போலப் படிக்கிறார்கள். அதில் ஆதித்திராவிடப் பிள்ளைகளே அதிகம். இவர்களுக்கெல்லாம் ஊண், உடை அங்கேயே கொடுக்கப்படுகின்றன. ப. ஜீவானந்தன், ஆ. சுப்பையா ஆத்மாரம் இவர்கள் அவ்விடங்களிலுள்ள உதவியாளர்களைக்கொண்டு நடத்தி வருகிறார்கள் இவர்கள் தமிழ், இங்கிலீஷ் பாஷையிலும் சைவ சித்தாந்த சாஸ்திரத்திலும் பாண்டித்திய முடையவர்களென்று தெரிகிறது. அந்த ஊர் நாட்டுக்கோட்டை நகரத்தைச் சேர்ந்தது. அதனல் அவர்கள் உதவி அவசியம் வேண்டும். நாட்டுக்கொட்டை நகரத்துச் செட்டியார் இளைஞர்கள் பலர் அங்கு காணப்பட்டார்கள். நாட்டுக்கொட்டை நகரத்துப் பிரமுகர்களால் பிரயோஜனமற்று செய்யப்படும் தருமங்களில் ஒரு சிறிது இவ்வாசகசாலைகளைப் போன்றவைகளுக்குச் செலவிடுவது விசேடமென ஒரு இளைஞருணுக்குப்பட்டுவிடுமேயானல் உண்மை விளக்க நிலைய குருகுலத்திற்கு ஒரு குறைவுமிருக்காது. அடுத்து அவ்விதமேற்பட சத்தியமான தருமத்தையும் அதனல் அடையும் கீர்த்தியையும் அடைவதற்கு அன்நகரத்தில் அந்த வகுப்பில் உத்தம இளைஞர்கள் உதித்தேயிருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமே இல்லை. இந்தப் புண்ணியத்தையும் பெருமையையும் அடையும் பாக்கியம் நகரத்துப் பிரபுக்களுக்குச் சொந்தமாய் விடுவதற்காகவே அந்த நாட்டில் உண்மை விளக்க நிலைய குருகுல கல்விச்சாலை அமைந்து போயிருக்கிறதென நினைக்கிறேன். சிதம்பரத்திற்கு ராஜா அண்ணாமலை செட்டியாரைப்போல்நாட்டுக்கொட்டை நகரமான நாச்சியார் புரத்திற்கு ராஜாவாக எந்தசெட்டியார் வந்துபுண்ணியத்தையும்பெருமை பொருந்திய கீர்த்தியையும் அடைந்து உலகமெலாம் போற்றும்படியாக வாழ்வாரோ யாமறியோம். ஆனல் இதற்கு ஒரு செட்டியார் ராஜகவாக வந்தே தீரவேண்டும். அது தெய்வத்தின் சம்மதமுமாகும். இந்தப் புண்ணியத்திற்கு எந்தப் புருடன் புண்ணியத்தோடிருக்கிறானே என்பதை நாமறியாவிட்டாலும் நாட்டுக்கொட்டை செட்டியார் நாடு கூடிய சீக்கிரம் நமக்குக் காட்டி விடும்.

[தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க]

# காட்டேரி அல்லது கொள்ளிவாய்பிசாசு

( மயிலை சீனி வேங்கடசாமி )

2—3—30 ல் வெளிவந்த "குடி அரசில்" பேய் உண்டா இல்லையா? பேய்பற்றிய சில சந்தேகங்கள் என்னும் தலைப்புள்ள வியாசத்தில் "குஞ்சு" என்பவர் எழுதியுள்ள விஷயங்களைக் கண்டேன். அதற்றில் இரண்டொரு விஷயங்களுக்கு மாத்திரம் எனது அபிப்பிராயத்தைச் சொல்ல விழைகின்றேன்.

பேய்கள் உண்டு என்று சொல்லப் படுவதை நான் கேழ்விபட்டிருக்கிறேன். ஆனால், எனக்கு அதில் நம்பிக்கையில்லை. ஏனென்றால் நான் அதைப்பார்த்ததில்லை. உண்டு என்று சொல்லுகிறவர்கள் எனக்குக் காட்டிக் கொடுக்கவும் இல்லை. பேய் என்பது பாமரமக்களை ஏமாற்றுவதற்காக சொல்லப்படும் ஒரு பொய்யான கட்டு வார்த்தையேயாகும்

"பேய்களில் கொள்ளிவாய்ப் பிசாசு, முனி, குட்டிச்சாத்தான்...... என்கின்றவை போன்ற பல வகைப் பெயர்கள் சொல்லப்படுவது என்?" என்று குஞ்சு அவர்கள் கேட்டிருக்கிறார்.

இக்கேழ்வியில் "கொள்ளிவாய்ப் பிசாசு" என்பதைப்பற்றி மாத்திரம் இங்கு எழுதுகிறேன். காடு முதலிய இடங்களில் இராக்காலத்தில் நெருப்பு திடீரென்று பற்றி எரிவதுண்டு. இப்படி எரியும் போது அவிந்து அவிந்து எரியும். அவிந்த பிறகு மறுபடியும் எரியும் போது சற்று தூரத்தில் போய் எரியும். இதைத்தான் பாமர ஜனங்கள் கொள்ளிவாய்பிசாசு என்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் இது உண்மையில் கொள்ளிவாய்ப்பிசாசு அல்ல. காட்டேரி என்று சொல்லப்படுவதும் இதைத்தான் போலும் (காடு X எரி = காட்டேரி என்றாயிற்று) காட்டேரி என்றால் காட்டில் அதாவது வெளியிடங்களில் எரிவது என்ற பொருள் உண்டாகிறது. இது ஏன் இப்படி எரிகிறது என்பதைச் சொல்லுவோம். பட்டுப் போன புல் பூண்டுகளும், அழுகிப் போன இலைதழைகளும் ஈரமுள்ள சதுப்பு நிலங்களில் கிடக்குமானால், அவைகளிலிருந்து ஒருவித ஆவி[கால்]உண்டாகிறது. இந்த ஆவியில் கரியவாயுவு(Carbon)ஜலவாயு Hydrogen] என்னும் வாயுக்கள் அல்லது சத்துகள் இருக்கின்றன. இவ்வாயுக்கள் காற்றில் எரியுந் தன்மையுள்ளன. ஏனென்றால் சாதாரணகாற்றில் ஆக்சிஜன் என்னும் பிராணவாயு இருக்கிறது. இப்பிராணவாயும் கரிவாயும் சேரும்போது நெருப்பு எரிவது போல் தோன்றும் இப்படி எரிவதை வெளிச்சமுள்ள பகற்காலத்தை விட இராக்காலத்தில் நன்றாய்க் காணலாம். மனித வாசமற்ற காடுகளிலும் சதுப்பு நிலமுள்ள மைதானங்களிலும் இவ்விதம் நெருப்பு திடீரென்று பற்றி எரிவதும் மறைவதும் மீண்டும் சற்று தூரத்தில் எரிவதும் மறைவதுமா யிருப்பதை நமது முன்னோர்கள் சைன்ஸ் ஞானமில்லாதலால் அதன் காரணத்தை உணரமுடியாமல், அது பிசாசினால் உண்டாகிறதாகத் தவறாக நினைத்து அதற்குக் காரணப் பெயராக "காட்டேரி என்றும்" "கொள்ளிவாய்ப் பிசாசு" என்றும் பெயர் இட்டார்கள் போலும்; இதற்கு ஆங்கிலத்தில் (Will-O-the wisp) என்றும் Jack-A lantern) என்றும் பெயர் சொல்லுவது உண்டு பிற்காலத்தில் "இந்த காட்டேரி அல்லது கொள்ளிவாய் பிசாசுக்கு" உருவம் முதலியன கற்பிக்கப்பட்டும் பாமர மக்களால் வணங்கப்பட்டு வருகிறது. ஆனால், உண்மையில் மனிதருக்குத் துன்பஞ்செய்யும் காட்டேரியோ அல்லது கொள்ளிவாய்ப் பிசாசோ உலகத்தில் கிடையாது. அறியாமையும் அதனால் உண்டான மூட நம்பிக்கையும் அதனால் ஏற்பட்ட பயங்கொள்ளித்தனமும் தான் பாமர மக்களைப் பிடித்திருக்கும் பயங்கரமான பிசாசுகளாகும்.

இந்த பொய்ப்பிசாசுகள், பாமரர்களாயிருப்பவர்களிலும் மிகவும் ஏமாந்தவர்களாயிருப்பவர்களிடத்தில் தான் அதிகாரத்தைக் செலுத்துகின்றன. அதாவது ஆண்பிள்ளைகளைப் பிடிப்பதில்லை. ஏனென்றால் ஆண்மகன் பாமரனாயிருந்தாலும் தைரியமுடையவன். பெண்பிள்ளைகளிலும் அறிவுள்ள பெண்மக்களையும் படித்த பெண்மக்களையும் இவை நெருங்குவதில்லை. ஆனால், அறிவற்ற முழு மூடமான பெண்களையும் கொழுத்துக் கொழுப்புக்கொண்டுள்ள பெண்களையும் இந்த பொய்ப் பிசாசுகள் பிடித்துக் கொள்கின்றன. மூடப் பெண்களை மூடநம்பிக்கையென்னும்பேயும் கொழுப்புக்கொண்டுள்ள பெண்களை அகம்பாவம் என்றும் பேயும் பிடித்து ஆட்டுகின்றன. உண்மையாக நிகழ்ந்த சங்கதியைச் சொல்லுகிறேன். சென்ற ஆண்டில் ஒரு பாமர கிழவி இரவு ஒரு மணிக்கு ஓஹோ. ஓஹோ என்று கூவிக் கொண்டு தெருவில் வந்து தலைவிரித்து ஆடி "வாங்கிபேதி ஊரில் வந்து விட்டது. நாற்சந்தி மூலையில் விளக்கு ஏற்றிவைத்தால் அம்மன் சந்தோஷப்பட்டு குறைகளை நீக்கிவிடுவாள்". என்று சொல்லி ஆர்ப்பாட்டம் செய்தாள். அச்சமயம் ஊர் காவலுக்காக தெருக்களில சுற்றிவரும் போலீஸ் கான்ஸ்டேபிள்கள் இரண்டுபேர் அங்குவந்தார்கள். அவர்கள் அந்தக் கிழவியைப் பிடித்து, "அம்மா விளக்கு வைக்கிறது பிறகு இருக்கட்டும். இப்பொழுது போலீசுக்கு வரப்போகிறாயா? வீட்டுக்குப்போகப் போகிறாயா?" என்று கேட்டார்கள். அந்தக் கிழவி பயந்து நடுங்கி "நான், வீட்டுக்குப் போகிறேன். போலீசுக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டு நேரே வீட்டுக்குப் போய்விட்டாள். உண்மையானபேய் போலீசுக்குப் பயப்படுமா? இது மயிலாப்பூரில் நடந்த செய்தி. இப்படித்தான் நெஞ்சழுத்தமுள்ள சில பெண்கள் ஜனங்களை மிரட்டுகிறார்கள். இன்னும் நான் நேரில் கண்ட இரண்டொரு பேய்ப் புரட்டுகளைச்சொல்ல இங்கு இடமிராது என்று இதோடு நிறுத்துகிறேன்.

உடுக்கையடிப்பது சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். உடுக்கை சத்தத்திற்கும் மனித உடம்பிலுள்ள நரம்புகளுக்கும் ஒருவித சம்பந்தம் இருப்பதாகவும், ஆகவே பெண்கள் உடுக்கை சத்தத்தை உற்று கவனித்துக் கேட்பார்களானால் அவர்களுக்கு ஒருவித மயக்க உணர்ச்சி உண்டாகி தலை சுற்ற ஆரம்பிக்கும் என்றும் சொல்லுகிறார்கள். இதனாலும் பேய் ஆடுவது பொய் என்று ஏற்படுகிறது.

இன்னும், நரம்பிலும் மூளையிலும் வியாதியுள்ள பெண்களுக்கும் (ஆண்களுக்குங்கூட) வாய்பிதற்றல்கை, கால், தலைமுதலியவைகளையும் காதுகளையும் ஆட்டுதல் முதலிய சேஷ்டைகள் காணப்படும். இதன் காரணத்தை யுணராமல் பேய் என்றும் பிசாசென்றும் ஜனங்கள் ஏமாற்றியும் ஏமாறியும் வருகிறார்கள்.

இன்னும் இப் பேய்ப் பிசாசு என்னும் ஏமாற்றமும் புரட்டும் பொய்யும் புழுகும் மந்திரம் என்னும் தந்திரமும் பூஜை என்னும் மதுமாமிசப் புசிப்பும், மதி மயக்கம் செய்து விபசாரம் புரிவதும் இன்னும் பல கொடுமைகளும் இங்கு எழுதி முடியாது. இவைகளுக்கெல்லாம் முதற் காரணமாயிருப்பது மக்களின் மூடத்தனமேயாகும்,

சிலர் வீட்டு புறக்கடை அல்லது தோட்டந் தோப்புகளில் சென்று பேய் பிசாசுகளுக்கு ஆடு பலி கொடுத்து மது, மாமிசம், சுருட்டு முதலியவைகளை வைத்துக் கும்பிடுகிறார்கள். இவ்விதம் படைக்கப்பட்ட மாமிசமும் சாப்பாடும் ருசியில்லாமல் சப்பென்று இருக்கிறதாகவும் அதன் காரணம் அப்பேய் பிசாசுகள்வந்து அவற்றின் சாரத்தை மட்டும் சாப்பிட்டுவிட்டதாகவும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவதும் தவறு. ஏனென்றால் பேய் பிசாசுகளுக்குப் படைக்கப்பட்ட மாமிசம் சாதம் முதலிய உணவுப் பொருள்கள் ருசி இல்லாமற் போவதற்குக்காரணமுமுண்டு. ஆனால் அக்காரணம் பேய் வந்து சாப்பிடுவதனால் அல்ல. உண்மையான காரணம் என்னவென்றால், சொல்லுவோம். சாப்பாடு உஷ்ணமாயிருக்கும்போதுதான், நல்ல ருசியுள்ளதாயிருக்கும், ஆறிப்போனால் ருசி குறையும். இது சாதாரணமாக அனைவரும் அறிந்ததேயாகும். பேய் பிசாசுகளுக்கு மூட ஜனங்கள் படையல் போடும்போது தோட்டம், அல்லது புறக்கடைகளில் போகிறார்கள். அதாவது திறந்த வெளியில் காற்றோட்டம் அதிகமாயுள்ளவிடத்தில் ஆகாரங்களை வைத்துப் படைக்கிறார்கள். படையல் போட்ட பிறகுங்கூட பூசாரி உடுக்கை பம்பை சிலம்பு முதலியவை முழங்கப் பேய்களை "வர்ணித்துக்கொண்டு" இருப்பதில் மணிக்கணக்காகக் காலத்தைக் கடத்துவார். இவ்வளவு நேரமும் படைக்கப்பட்ட சாப்பாடு காற்றில் ஆறிக்கொண்டே இருக்கும். நெடுநேரம் காற்றில் ஆறிக்கொண்டிருப்பதால் அச் சாப்பாடு ருசியற்றுப்போவது ஆச்சரியமல்ல. ஆனால் மூட ஜனங்கள் அச் சாப்பாட்டின் ருசியை மட்டும் பேய் பிசாசுகள் உறிஞ்சிக்கொண்டு [சாப்பிட்டுவிட்டு] போனதாகச் சொல்வது ஆராய்ச்சிக்குப் பொருந்தியதல்ல, அந்தோ! நமது ஜனங்களுக்கு யோசித்து உணரும் தன்மை எப்பொழுதுதான் உண்டாகுமோ! எவன் எதைச் சொன்னாலும் உடனே நம்பிவிடுகிற மூட வழக்கம் நம்மவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. யோசித்துப் பார்க்குஞ் சக்தியுள்ள மூளை மனிதருக்கு அமைந்திருக்கும்போது மிருகங்களைப் போல மூளையைச் செலுத்தி யோசிக்காமல் மௌடீகமாய் நம்பிவிடும் காரணம் யாதோ?

## தென்னாட்டில் உதிர்ந்த மலர்கள்.

(பரைம்பையோன்—பொருக்கியது)

வட நாட்டில் ஒரு தலைவர் உப்பு செய்ய வேண்டும் இல்லாவிட்டால் உயிரை விடவேண்டும் என்று சொல்லும்போது நம் தென்னாட்டில் ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பதற்கு யேன் உயிரை விடக்கூடாது.

எல். ராமநாதன்.

வைக்கம் வீரர் எனக்கு ஒரு மனிதனாக தோன்றவில்லை. ஒரு கொள்கையாகவே தோன்றுகிறார்.

எல். ராமநாதன்

சரி பகுதி ஜனத்தொகையினரான பெண்களுக்கு நாம் சுதந்தரம் அளிக்காமல் இருந்து கொண்டு எப்படி நாம் சுயராஜ்யம் பெறமுடியும்.

முன காலபட்டாபிராமய்யர்.

மக்களை வேற்றுமை படுத்தும் மதம் எதுவானாலும் அது கண்டிப்பாய் அழிந்து போகும்

கி. ஆ. பெ. வி.

ஆறரைக் கோடி மக்களை தீண்டப் படாதவராக தாழ்த்தி வைத்திருக்கும் நாம் எப்படி பூரண சுயேச்சைஅடைய முடியும்?

கோ. கோவிந்தன்

நம்மை அடிமையாக்கினது மதம்-நம்மை தரித்திராக்கியது சடங்கு நமது முன்னேற்றத்தையும் முயர்ச்சியையும் கெடுத்தது கடவுள்.

ஈ. வெ. ரா.

ரூ. 500 இனும் எப்படி?
விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.
மானேஜர், தாபற்பெட்டி 92
சென்னை.

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—யுத்த காண்டம்

கட்டுரை—3

(கு. சந்திரசேகரப்பாவலர்)

வீடணன் நான்கு அமைச்சரோடும் இராமனை நோக்கி வருவதைக் கண்ட சுக்கிரீவன், "அதோ அரக்கன் இராமனைக் கொல்ல வருகிறான்" என்று கூவினான். வானரர் வீடணனைக் கொல்லத் துணிந்தனர். வீடணன் வேறு அச்சமில்லாமல் அவர்களுக்கு மேலே விண்ணில் வந்து நின்று கொண்டு, "நான் இராவணனுடைய தம்பி வீடணன். நான் பலமுறை சீதையை இராமனிடம் விட்டுவிடும்படி சொன்னேன். அவன் என்னை இகழ்ந்து கொலைத் துணிந்தான். அதனால் நான் இராமனைச் சரணமாக அடைகிறேன்." என்று கூறினான். சுக்கிரீவன், இவன் இராவணனால் அனுப்பப்பட்ட பாவி. இவனை நாம் சேர்க்கக்கூடாது. இவனை வாலியைப்போல ஓரே அம்பால் கொல்லாமல் சித்திரவதை செய்ய வேண்டும்." என்றனன். இராமன் வானர மந்திரிகளிடத்தில் அபிப்பிராயம் கேட்டான்.

அங்கதன் வீடணனைச் சோதித்து நல்லவனானால் சேர்த்துக்கொள்ளலாம் என்றான். சரபன் அது முடியாதது என்றான். சாம்பவான், "இவன் நம்மிடம் வரவேண்டிய காலம் இதுவல்ல. தனது அண்ணனும் கூடப் பிறந்தவனுமாகிய இராவணனுக்கு ஆபத்து நேர்ந்திருக்கும்போது அவனைக் கைவிட்டு வந்த இவனை எப்படி நம்புவது." என்று கூறினான். மைந்தன் என்பவன் அவனைச் சோதித்து சேர்த்துக்கொள்ளலாம்." என்றான். பின்னர் அனுமான், இவனைச் சோதிப்பதும் சிரமம் இல்லை. ஏனெனில் இவன் இதோ நமக்கு எதிரே விண்ணில் நிற்கிறான். தாங்கள் கரன் முதலியோரைக் கொன்றதையும் வாலியைக்கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் கட்டியதையும் அறிந்து இங்கே வந்திருக்கிறான். இராவணனுடைய முயற்சிகள் பலிக்காதென்பதையும் தங்களுடைய முயற்சிகள் கைகூடும் என்பதையும் தாங்கள் வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்கு நாட்டைக் கொடுத்ததையும் பார்த்து தானும் இலங்கை அரசாட்சியை அடையவேண்டும் என்கின்ற எண்ணத்துடன் மனப்பூர்வமாகத் துணிந்தே வந்திருக்கிறான். அதனால் இவனைக் கட்டாயம் ஏற்றுக்கொள்ளலாம்." என்று சொன்னான்.

இராமன் "சரணமடைந்தவனைக் காப்பதுவே என் கடன்." என்றான். சுக்ரீவன் உடனே "இவன் நன்றி கெட்டவன். தன் தமையன் இப்படிப்பட்ட ஆபத்திலிருக்கையில் அவனைக் கைவிட்டு வந்தவன் நம்மைக் கைவிடமாட்டானா? இவனைக் காட்டிலும் கொடியவனாயிருப்பவனைக் காட்டிலும் வேறு ஆபத்து உண்டா? என்றான்.

இராமன், "இவன் தன்னுடைய அண்ணனுடன் பகைத்துக்கொண்டே இங்கே வந்திருக்கிறான். இவன் என்னால் இராவணனைக் கொன்று அவனுடைய அரசாட்சியை அடைய விரும்புகிறான். அதனால் இவன் நம்மைப் பகைக்கமாட்டான். தனக்கு மூத்தவன் தீயவனாக இருந்தாலும் அவனுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டுமென்ற அறத்தை எல்லோரும் கைக்கொள்ளமாட்டார்கள். உடன் பிறந்தவர்களெல்லோரும் பரதனைப்போலாவார்களா? ஆகையால் இவனை ஏற்றுக்கொள்ளலாம்." என்று சொன்னான். சுக்கிரீவன் மறுபடியும் தடுத்தான். இராமன், "தன் வீட்டை யடைந்த வேடனுக்காக ஒரு புறா தன் உயிரையும் கொடுத்து தனது உடலை அவனுக்கு உணவாகத் தந்தது. வீடணனைச் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்." என்றான். இராமனுடைய ஏவலால் சுக்கிரீவன் வீடணனை அழைத்து வந்தான். வீடணன் இராமனுடைய காலில் வந்து விழுந்தான். இராமன் அவனைக்கண்டு மகிழ்ந்து, "இராவணனுடைய ஆற்றலை எனக்கு உள்ளபடி கூறு." என்று கேட்டான். வீடணன் அவைகளை விவரித்துச் சொன்னான். இராமன், "சத்தியமாக நான் உனக்கு இலங்கை ஆட்சியைத் தருவேன்." என்றனன். வீடணனும் "நான் அரக்கரைக் கொல்வதிலும் இலங்கையைப் பிடித்து இடிப்பதிலும் என் உயிருள்ளமட்டும் உதவி செய்வேன். என்னைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்." என்றான். இராமன் வீடணனை ஆசையுடன் தழுவிக்கொண்டு அவனை வசப்படுத்தினான். இலக்குவன் இராமனுடைய கட்டளையால் கடல் நீரைக் கொண்டுவந்து வீடணன் தலையில் விட்டு அவனை இலங்காதிபதியாக ஆக்கினான்.

பிறகு வேறொரு சமயத்தில் அனுமனும் சுக்கிரீவனும் வீடணனைத் தனியே அழைத்துக் கடலைத்தாண்ட வழி கேட்டனர். அவன், "இராமன் கடலரசனைச் சரணமடையட்டும்" என்றான். அவர்கள் இருவரும் அதை இராமனிடம் கூறினர். இராமன் வீடணனைப் புகழ்ந்து தருப்பையைப் பரப்பி அதன்மேல் படுத்தான்.

இவ்வரலாற்றை ஆராய்வோம்.

வீடணன் இராமனுக்கு நேரே விண்ணில் வந்து நின்றுகொண்டு தன்னைச் சேர்த்துக்கொள்ள வேண்டினான். சுக்கிரீவனும் பிறரும் "தன்னுடைய அண்ணனையே மோசம் செய்யும் இப்பாவி வேறுயாருக்கு மோசம் செய்யமாட்டான்?" என்று கூறினர். அனுமானோ "தாங்கள் கரன் முதலியோரைக் கொன்றதையும் வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்குப் பட்டம் கட்டியதையும் அறிந்து, நீர் இராவணனைக்கொல்வீர் என்பதையும் எண்ணி தானும் இலங்கை அரசாட்சியைப் பெறவேண்டுமென்ற ஆசையால் வந்திருக்கிறான்." என்று கூறினான். இதை இராமன் ஒப்புக்கொண்டான். அனுமான் இலங்கைக்குப் போயிருக்கும்போது கட்டாயம் வீடணனோடு சூழ்ச்சிகள் செய்து வந்திருத்தல் வேண்டும். அதனாலேயே அனுமான் கூறியதை இராமன் ஒப்புக்கொண்டனன்.

மேலும் இராமன் பெரிய தந்திரசாலி; அறிவுள்ளவன். அதனாலே மிகவும் வல்லவனாகிய இராவணனைக் கொல்வதற்கு தகுந்த துணைவனைத் தேடியிருந்தான். ஆகையால் வீடணனை ஒப்புக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாயிற்று. இராமனுக்கு வீடணன் சகோதரத் துரோகி என்பது நன்றாகத்தெரியும். அவன் சுக்கிரீவனை நோக்கி, "தனக்கு மூத்தவன் தீயவனாகவிருந்தாலும் அவனுக்குக் கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும் என்ற அறத்தை எல்லோரும் கைக்கொள்ள மாட்டார்கள். உடன்பிறந்தவர்களெல்லோரும் பரதனைப்போலாவார்களா?" என்று கூறுகிறான். இராமன் எவ்வளவு கெட்டவனாகி பரதனை வஞ்சித்து அரசைக் கைக்கொள்ளச் சூழ்ச்சி செய்திருந்தாலும் பரதன் அவைகளையெல்லாம்பொருட்படுத்தாமல் தனக்கு உரிய அரசை இராமனுக்குக் கொடுக்க காடுதேடி வந்ததை இராமன் பாராட்டி, "அவனைப்போல எல்லோரும் இருப்பார்களா? இவன் தனது தமையனைக் கொன்று அரசாட்சியைப் பெற விரும்புகிறான் ஆதலால் இவன் நமக்குத் துணையே செய்வான்" என்று புகன்றனன். வீடணனைப் போலும் தீய சுயநலக்காரர் இருப்பார்களா? வீடணன் இராமனை நோக்கி, "என் உயிருள்ள அளவும் நான் இலங்கையைப் பிடித்து இடிப்பதில் உதவி செய்வேன்" என்று கூறுகிறான். நன்றிகெட்ட பாதகனாகிய வீடணனிடமிருந்து வேறு என்ன நாம் எதிர்பார்க்க முடியும்? இராமன் தன் தம்பியால் அவனுக்கு முடிசூட்டி இலங்காதிபதியாக்குகிறான். தீயவர் எதை வேண்டுமானாலும் செய்வார்கள் போலும்!

அறிவற்றவர்கள் சிலர் "இராமன் தெய்வம் இராவணன் கூடப் பிறந்தவனாக இருந்தாலும் தெய்வமாகிய இராமனுக்குப் பகைவனானமையால் அவனை விட்டு வீடணன் பிரிந்து இராமனை அடைந்தது நீதியே" என்று கூறுவர். ஏதெல்லாம் அறியா மக்களை ஏமாற்றிப் பொருள் பறிக்கும் சுயநலக்காரர்களின் சூழ்ச்சியே. தனது கூடப்பிறந்த பரதனுக்கு துரோகம் செய்ததோடு நில்லாமல் சகோதரத் துரோகியாகிய சுக்ரீவனோடு சேர்ந்து வாலியைக் கொன்று மறுபடியும் சகோதரத்துரோகியாகிய வீடணனோடு கூடிய பாதகனை தெய்வம்! இது உண்மையாயின் தெய்வத்தின் இயல்பு மிக அழகிதே!! இனி கம்பர் போக்கைக் காண்போம்.

வீடணன் இராமன் முன் தாமதியாமல் அவனுக்கு நேரே விண்ணில் நின்றான் என்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவன் வந்த நேரம் இரவென்றும் அதனால் விடியுமட்டும் காத்திருந்து இராமனுக்குக் கேட்கும்படி தூரத்திலிருந்து கூவினானென்றும் கூறுகிறார்.

வீடணன் நான்முகனிடம் "கடவுளிடம் நேசமும் பார்ப்பனரிடம் அன்பும்" வேண்டுமென வரங்கேட்டிருந்ததாகக் கம்பர் வீடணன் அடைக்கலப் படலம் 22, 46 வது பாடல்களில் கூறுகிறார். பார்ப்பனருடைய ஆதிக்கத்திற்கு ஆக்கம் தேடியே கம்பர் இவ்வாறு கூறுகிறார். இது ஆரியருடையவும் அவரைச் சேர்ந்த அடிமைகளுடையவும் ஆகிய புன்மைக் குணமே!

வீடணனுடைய சகோதர துரோகத்தின் தீமையை சுக்ரீவன் வாய் மூலம் கம்பர் விரித்துரைக்கின்றார். அவன் அரசாட்சியைப் பெறுவது கருதியே சுயநலத்தால் இராமனை அடைந்தானென அனுமன் கூற்றாக அவர் விரித்துரைப்பது பாராட்டற் பாலதே. வால்மீகியும்கம்பரும் இங்ஙனம் வீடணன் சுயநலம் கருதியே அண்ணனைக் கொன்று நாடாளும் ஆசையால் வந்தானென்று வெளிப்படையாகக்கூற அறியா உலகினர் ஏனோ வீடணனைப் புகழ்ந்து போற்றுதல் வேண்டும்? அது இராமனைத் தெய்வமெனவும் அவனைச் சேர்ந்தோரெல்லாரும் நல்லவர்களாகவே இருக்க வேண்டுமென்றும் சுயநல ஆரியர் பரப்பிய மூடநம்பிக்கையை உடையவராகையாலேயே சகோதரத்துரோகம் செய்த பாதகனாகிய வீடணனையும் உலகம் புகழ்கின்றது! இதை அறிஞர் சிந்தித்து அறியாதாருக்கு எடுத்தியம்புதல் வேண்டும்.

"கரனையும் வாலியையும் கொன்ற இராமன் இராவணனையும் கொல்வான். நாம் அவனோடிருந்தால் நம்மையும் கொல்வான். ஆதலின் நாம் இராமனை அடைந்தால் இராவணனைக்கொன்று நமக்கு அரசையும் தருவான்;; என்று வீடணன் அச்சத்தையும் ஆசையையும் கொண்டே இராமனை அடைந்தான் என்பதை வீடணன் வாய்மூலமாகவே கம்பர் வெளிப்படுத்துகிறார். கம்பர் இலங்கைக் கேள்விப் படலம் 69-ம் பாடலில்,

(தொடர்ச்சி 12 ம் பக்கம் பார்க்க)

# தலைச்சேரி

## தீயர், நாடார், பில்லவர் மகாநாடு

### தலைவர்

டப்பில்யூ. பி. எ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி.
ராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு

### வரவேற்பு அக்கிராசனர்

கொட்டியத்து கே. கிருஷ்ணன் எம். எல். சி.
தீண்டாதார் கோவிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்

மலையாள தேசத்திலுள்ள தீயர், ஈழுவர் என்றும் சமூகத்தையும் தமிழ் நாட்டிலுள்ள நாடார்கள் என்னும் சமூகத்தையும் கன்னட தேசத்திலுள்ள பில்லவர்கள் என்னும் சமூகத்தையும் ஒன்றுபடுத்தி மேல்கண்ட மூன்று நாட்டிலுமுள்ள மேல்படி மூன்று சமூகத்தினுடையவும் பொது வாழ்க்கையில் உள்ள குறைகளையும் மற்றவர்களால் இழைக்கப்படும் கொடுமைகளையும் நிவர்த்தி செய்து முன்னேற்றமடைவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும் என்கின்ற எண்ணத்தின்மீது தலைச்சேரி கண்ணனூர் கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள தீயர் வகுப்பைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களால் மேல்கண்ட அதாவது தீயர், நாடார், பில்லவர் மகாநாடு என்னும்பேரால் தலைச்சேரியில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இதற்கு கேரள ஞானோதய சங்கத் தலைவரும் தலைச்சேரி சேர்மென்னுயிருந்தவரும் பிரபல வக்கீலும் பரம்பரை பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவரும் சென்னை சட்ட சபைமெம்பருமான திரு கொட்டியத்து கே. கிருஷ்ணன் அவர்கள் பெரிதும் முயற்சியெடுத்து மேற்படி ஞானோதய சங்கத்தின் ஆதரவில் இம்மகாநாட்டை கூட்டி உயர்திரு சுயமரியாதை சங்கத் தலைவர் சௌந்திரபாண்டியனவர்களை தலைமை வகிக்க வேண்டிக் கொண்டதற்கு இணங்க திரு' பாண்டியனும் திரு. ஈ.வெ இராமசாமியாரும் 16-3-30 தேதிகாலை தென்மேற்குமெயிலில் ஈரோட்டிலிருந்து தலைச்சேரிக்கு புறப்பட்டுச் சென்றார்கள். வழியில் கள்ளிக்கோட்டை ரயில்வே மேடையில் மிதவாதி பத்திராதிபர் உயர்திரு. சி. கிருஷ்ணன் பி. ஏ. பி. எல். அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் வரவேற்று மாலையிட்டு உபசாரம் செய்தார்கள். பிரகு அங்கிருந்து திரு. விருதுநகர் செந்தில் குமார நாடார் குமாரர் பெரியசாமி அவர்களும் மற்றும் சிலரும் அதே ரயிலில் புரப்பட்டு சரியாய் ஒரு மணிக்கு தலைச்சேரி சேர்ந்தார்கள். ரயில் தலைச்சேரி ஷ்டேஷன் வந்ததும் திரு. கொட்டியத்து கிருஷ்ணன் முதலியு சுமார் 100 பேர்கள் ரயில் மேடையில் நின்று ஜே சப்தத்துடன் வரவேற்று மாலையிட்டு மோட்டார்காரில் சாலைக்கு அழைத்துச் சென்று ஆங்கில முறைப்படி ஒரு பெரிய் விருந்து நடத்தினார்கள்: அவ்விருந்தில் மங்களூரிலிருந்து வந்திருந்த பில்லவர் வகுப்பைச் சேர்ந்த திரு. சொவர்ணு பி. எ. பி. எல் முதலிய பல கனவான்களும் கலந்துகொண்டார்கள். சரியாய் 3 மணிக்கு சாலையில் இருந்து திரு. பாண்டியன் அவர்களையும் ஈ, வெ. இராமசாமி அவர்களையும் பாண்டு மேளம் முதலிய வாத்தியங்களுடனும் குடை கொடி விசிறி சாமரம் முதலிய விருதுகளுடனும் மூன்றுபெரிய யானைகள் முன் செல்ல ஊர்வலமாகப் பெருத்த கூட்டத்துடன் மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் சென்றார்கள், பெரிய பெரிய அதிர்வெட்டுகள் போடப்பட்டன. ஊர்வலம் பந்தலுக்கு அருகில் சென்றதும் ஒரு புகைப்படம் எடுக்கப்பட்டு தலைவர் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டார் பந்தலுக்குள் ஏற்கனவே சுமார் 500 பெண்களும் 2000 ஆண்களும் நிறைந்து இருந்தது குறிப்பிடத்தக்கது. மேல்கொண்டு ஊர்வலத்துடன் வந்த ஜனங்களுக்கு கொட்டகைக்குள் இடம் கிடைபபது கஷ்டமாகி விட்டது. பிறகு தலைவர்கள் ஆசனத்தமர்ந்ததும்

இரண்டு பெண்மணிகளால் சமஸ்கிருதத்தில் வாழ்த்துப்பத்தியங்கள் சொல்லப்பட்டண பிறகு திரு, கொட்டியத்து கிருஷ்ணன் அவர்களால் ஒரு நீண்ட வரவேற்பு உபன்யாசம் செய்யப்பட்டது. அதில் மேல்கண்ட மூன்று சமூகத்தின் முற்கால தற்கால நிலைமையும் ஒற்றுமையையும் முற்போக்குக்கு வேண்டிய காரியங்களையும் குறிப்பிட்டிருந்தது. அரசியல், அதிகாரம், உத்தியோகம், சமூக சமத்துவமும் முதலியவைகளில் தங்களுக்குச் சரியான உரிமையும் பிரதிநிதித்துவமும் இல்லை என்றும் அதற்காக பாடுபடவேண்டும் என்று கண்டிருந்தது.

அதுமுடிந்ததும் ரிடையர்ட் சப்ஜட்ஜியும், மாஜி சட்டசபை மெம்பருமான ரூவ் சாகிப்பு பி. ராமன் அவர்களால் திரு. பாண்டியன் அவர்கள் பிரேரேபிக்கப்பட்டு ரிடையர்ட் டிப்டிக் கலெக்டர் ரூவ் சாகிப் கே. சந்தன் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு பெருத்த ஆரவாரத்தினிடை அக்கிராசனத்தில் அமர்ந்து தமது முகவுரை பிரசங்கத்தை ஆங்கிலத்தில் வாசித்தார்.

பிறகு திரு ஈ.வெ! ராமசாமியார் சுயமரியாதை இயக்கம் என்பது என்ன? அது நமது நாட்டிற்கு எவ்வளவு அவசியம்? என்பதைப்பற்றி ஒரு மணி நேரம் பேசினர்.

அதைக்கேட்ட ஜனங்களின் ஆரவாரமும், உர்ச்சாகமும், சிரிப்பும், ஆச்சரியமும் பார்த்தவர்களுக்கே விளங்கும். உபந்நியாசம் முடிந்ததும் அநேகர் திரு ராமசாமியாரிடம்வந்து பாராட்டி விட்டு போனார்கள்.

பிரகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன:—

குடிவார மசோதா சீக்கிரம் சட்டமாகவேண்டுமென்றும்.

விகிதாச்சாரம் உத்தியோகம் கிடைக்கவேண்டுமென்றும்;

மேற்படி மூன்று சமூகத்திலும் உள்ள குறைகளை அதிகாரிகளுக்கு எடுத்துச்சொல்லத் திருவாளர்கள் பாண்டியன், கே. கிருஷ்ணன், சி. கிருஷ்ணன், சொவர்ணு ஆகியவர்களை கமிட்டியாக நியமித்தும்

கருப்பட்டி உர்ப்பத்தி செய்யும் விஷயத்தில் அரசாங்கம் ஆராய்ச்சி செய்து தக்க முறைகளைக கையாளச் செய்யவேண்டும் என்றும்.

கொப்பரைத் தேங்காய் விலை குறைந்து போனதால் அதை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும்.

கிராம சங்கம் நிர்மாணித்து எலக்ஷன் ஓட்டர்லிஸ்டுகள் சரியாய் தயாரிக்கும்படி செய்யவேண்டும் என்றும்,

மதுபானம் விலக்கவும், மதுவுக்கு மரம் விடுவதைத் தடுக்கவும் முயர்சிக்கவேண்டும் என்றும்.

எல்லா இந்து வகுப்பாரையும் இந்து கோவில்களுக்குள் விடவேண்டும் என்றும் மற்றும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பிரகு சங்கீதப் போட்டிவைத்து சுமார் 15 பெண்கள் தனித்தனியே பாடப்பட்ட பின் தலைவா திரு. சௌந்திரபாண்டியனால் தங்கத்திலும் வெள்ளியிலும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பிரகு கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

இந்த மகாநாட்டின் பலனாய் சுமார் 150 புலையர்கள் '(தீண்டப்படாதார்) என்னும் வகுப்பாரை மேளவாத்தியங்களுடன் அங்குள்ள ஜகநாத சுவாமிகோவிலுக்குள் உள் பிரகாரம்மூலம் அழைத்துச்சென்று சாமிதரிசனம்செய்வித்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. பிரகு மலபார் ஜில்லாபோர்டு தலைவர் திரு. கான்பகதூர் மொய்டு எம். எல். சி. அவர்கள் தலைவர்களை தனது வீட்டுக்கழைத்துச்சென்று சிற்றுண்டி பானம் அளித்து ஜாகைக்குக்கொண்டுவந்து விட்டார். அன்றிரவும் சமபந்தி விருந்து நடந்தது. மருநாள் காலையில் அநேக பிரமுகர்கள் ஜாகைக்கு வந்து தலைவர்களைக்கண்டு பேசிப் போன பிறகு திரு. கே. கிருஷ்ணன் அவர்கள் வீட்டில் தலைவர்களுக்கும் திரு. மொய்டு அவர்களுக்கும், சில உத்தியோகஸ்தர்களுக்கும் பலமான விருந்து ஒன்று நடந்தது.

பிரகு பகல் 1-30 மணிக்கு திரு. பாண்டியனும் ஈ. வெ. ராமசாமியும் கிழக்குமேற்கு மெயிலில் புரப்பட்டு திரு. ராமசாமி ஈரோட்டிற்கும், திரு. பாண்டியன் சென்னைக்கும் சென்று விட்டார்கள். (தலைவா உபன்யாசம் பின்னால் வரும்)

தலைவர்கள் தலைச்சேரிக்கு வந்ததின் ஞாபகக்குறிப்பாய் அங்கு திரு. வாசு பி. ஏ. பி. எல். அவர்களால் ஒரு சுயமரியாதைச் சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

---

## ரயில்வே தொழிலாளர் கேசு.

தென் இந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிருத்தத்தின்காரணமாய் தொழிலாளர் தலைவர்கள் 15 பேர்கள் மீதுசதியாலோசனை குற்றம் சாட்டி திருச்சி செஷன் ஜட்ஜி ஆள் 1 க்கு 10, 10 வருஷ வீதம் கடின காவல் தண்டனை விதித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும். மேற்படி செஷன்ஜட்ஜி தீர்ப்பின் பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டதில் மேல்படி தீர்ப்பில்கண்டிருந்த சதியாலோசனை குற்றத்தைதள்ளிவிட்டு தண்டவாளத்தின் மேல் படுத்து சத்தியாக்கிரகம் செய்வதாக சொன்னதற்கு மாத்திரம் 12 எதிரிகளுக்கு ஆள் ஒன்றுக்கு 6, 6 மாதம் வெறும் காவல் தண்டனை விதித்து மற்ற மூன்று எதிரிகளை விடுதலை செய்து விட்டார்கள்.

---


## பாரீஸ் படுக்கரை.

### போட்டோ படங்கள்.

பாரிஸ் தேசத்தில் உள்ள அழகிய பெண்களை போட்டோஎடுத்துத் தயாரிக்கப்பட்டது: மிக்க அழகாகவும் விதவிதமான காதல் ஊட்டும் படங்கள், பற்பல மாதிரியாக நடிக்கும்காதலைத் தந்து மனதிற்கு சந்தோஷத்தைத் தரும். ஒரு தடவை ஆர்டர் செய்து பார்த்தால் உண்மை விளங்கும், வெளி நாட்டினர் முன் பணம் அனுப்பவும். டஜன் ஆல்பத்துடன்

விலை ரூ. 1—14—0

மு கண்ணன்

காளிவசிகரணி நிலயம்,

மவுண்ட்ரோட் P. O. சென்னை.

# சர்க்காருக்கு எச்சரிக்கை.

(அயியாழுத்து.)

இந்நாட்டில் ஒரு புறம் தேசியம் தலைவிரித்தாடுகிறது. இந்நாட்டினின்று ஆங்கிலேய ஆட்சியை விரட்டியடிக்க வெடிகுண்டுகள் மற்றொரு பக்கம் எறியப்படுகின்றன பலாத்காரம் நாசத்தையே விளைவிக்குமெனை அதை ..க்கவும், இந்தியாவின் ஆத்ம சக்தியை உலகத்தாருக்கு நிலைநாட்டிக் காட்டவும் காந்தியடிகள் பிறிதொரு பக்கம் சாத்வீகப்போர் தொடங்கியுள்ளார்.

* * *

...கிலேயில் தேசீயத்தைத் ...க்கவும், இச்சர்க்காரை ஆதரிக்கவும் இந்நாட்டின் பல பாகங்களில் பிறிதோர் இயக்கமும் இருக்கிறது. இது தான் சமூகச் சீர்திருத்த இயக்கம். இவ்வியக்கத்தார் தேசபக்தியில் காந்தியடிகளைக் காட்டிலும் குறைந்தவர்களல்ல. அப்படியானால் இவர்கள் தேசீயத்தை ஏன் அடக்கப்பார்க்கிறார்கள்? இந்நாட்டின் செல்வத்தை நாடோறும் சுரண்டிச் சுரண்டி இந்நாட்டினரை ஏழ்மையாக்குவதும் சர்க்காரை ஏன் ஆதரிக்கிறார்கள்? என்றிரண்டு கேள்விகள் பிறக்கின்றன. இவற்றிற்கு விடை கூறுவாம்.

* * *

இந்நாட்டின் செல்வ அடிமைத்தனத்துக்கு மூலகாரணம் அந்நியர் ஆதிக்கமல்ல என்பதும், ஆனால் இந்நாட்டில் வியாபித்து நிற்கும் சாதி சமய பேதங்களும், மூட நம்பிக்கையால் தவண்டபழக்க வழக்கங்களும், பெண் அடிமையாகிய ஊழல்களே காரணம் என்பதும் சீர்திருத்தக்காரரின் திட்டமான எண்ணம். அன்றியும் பார்ப்பனனை விடப் பறையன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் பறையன் மனதில் ஊன்றிக்கிடக்கும் வரையிலும் பறையன் சுதந்திரப் போர் எனப்படும் தேசீயப் போருக்கு யோக்யதை உடையவன் அல்ல. முதலாவதாகப் பறையனது மனதில் தான் “பறையன்” என்றும், பிறமனிதனை விடத் தாழ்ந்தவன் என்றும் கற்பிக்கப் பட்ட எண்ணம் போகவேண்டும். இது போகவேண்டுமானால், இவ்வெண்ணத்துக்கு ஆதாரமான சாதிப்பிரிவுகள் தொலையவேண்டும். சாதி அசையும் போது, சாதியுடன் பிணைக்கப் பட்டுள்ள சகலமும் அசைந்தே தீரும். ஆகவின் சுதந்திரத்துக்கு முதற்படி படி வேற்றுமை ஒழித்தல் என்பதை புத்தியுள்ளவன் ஒப்புக்கொள்வான்.

* * *

இரண்டாவதாக இச்சர்க்காரை ஆதரிப்பானேன்? என்ற கேள்விக்கு விடை கூறுவோம். ஆங்கிலச் சர்க்கார் ஆதினத்தின் கீழ் நாம விரும்பினால்-விருப்பமுடன் முயற்சி செய்தால், முயற்சியுடன்—போராடினால் நாம் விரும்பும் சகல சமூக சீர்திருத்தங்களையும் எளிதில் பெற முடியும் என்ற நம்பிக்கையே காரணமாகும். இச்சர்க்கார் சாதிபேதம் அறியாதவர்கள், நம்மைப் போன்ற மூடப்பழக்க வழக்கங்களில் தோய்ந்து போகாதவர்கள், தலைவிதி கர்மபலன் என்ற நம்பிக்கையற்று தன் முயற்சியில் பெரிதும் பற்றுடையவர்கள் ஆதலால் இவர்கள் காலத்திலேயே சகலவிதமான சமூகச் சுதந்திரங்களையும் பெற்று இந்நாட்டிலுள்ள பறையர், புலையர், மறவர், குறவர், ஆகிய சகலருக்கும் பாரதியார் பாடிய விடுதலையை முதலில் பெற்றிட விழைகிறார்கள். இது பற்றியே தான் இச்சர்க்காரைசீர்திருத்த வாதிகள் துணைக்கொள்வது.

* * *

ஆனால் தேசிய வாதிகள் சமூகப் போராட்டங்கள் இக்காலத்துக்கு ஏற்றதல்லவென்றும் சுயராஜியம் சித்திபெற்ற பின்னர் இவை தீர்க்கப் பாலதென்றும், சமூகப் பிரசனையால் சுதந்திரப் பாதை தடைப்படக் கூடாதென்றும் உபதேசம் செய்கின்றனர். இதற்குச் சமூக சீர்திருத்தக்காரர் கூறும் விடையாவது.

* * *

சாதியாலும், சமயத்தாலும், வீணைப் பயனாலும், தலைவிதியாலும் ஈனப் பட்டுக்கிடக்கிறேன் என்று நம்புமொருவனை தேசியப் போருக்கு முதன் முதலில் ஆயத்தப்படுத்து முன் அவனை நோக்கி, “நீ மாசற்றவன், பிறரைப் போல் சமமாகவும், சமத்துவத்தோடும், பேதமற்ற உரிமைகளோடும் வாழப் பிறந்துள்ளவன் என்று கூற வேண்டும் “ஐயோ, என் சாதிமதச் சம்பிரதாயம் அதுவல்லவே” என்று அவன்சொன்னால் அவனை அச்சாதியினின்றும் முதலாவதாக வெளிபேற்ற வேண்டும் அதுவே நமது முதல் வேலை. அப்போது அவன் நிமிர்ந்து போர் செய்யவல்ல திறனும் ஆற்றலும் கொள்வான் அப்போது தான் அவன் தேசீயப்போர்வீரனாகமுடியும்.

* * *

அதுவன்றி அவன், தான் இருக்கும் நிலையிலேயே இருந்து கொண்டு “சுயராஜ்யத்துக்கு ஜே! என்று கத்துவானானால், அதனால் எதாவது சுயராஜ்யமும் வந்துவிடுமானால், அந்த சுயராஜ்யத்திலே கண்டிப்பாய் பண்டித மாளவியா போன்ற ராமராஜ்ய வர்ணாசிரமிகளும், சிசுஹிம்சா விர்த்தி சங்கத் தலைவரான எம். கே. ஆச்சாரிகளும் தலைமை பூண்டு அமுல் நடத்துவார்கள். அந்த ராஜ்யத்திலே சகலமும் மனுவாக்கின்படியே நடப்பினும் நடக்கும். அப்போது ஒரு பார்ப்பனனுக்குச் சமமாக ஒரு ‘சூத்திரன்’ உட்கார்ந்தால் மனுச்சட்டத்தின்படி அவன் குண்டி அறக்கவும் படலாம். ஆகவே வரப்போகும் சுயராஜ்யத்திலே ராமராஜ்யவாதிகளுக்கும், வர்ணாசிரமக் கொலைஞர்களுக்கும் செல்வாக்கோ, பலமோ இராது என்ற நிச்சயம் ஏற்படும் வரையிலும் இச் சர்க்காரை ஆதரிப்பதென்ற முடிவுக்கு சீர்திருத்தக்காரர்கள் வந்து விட்டது ஆச்சர்யமல்ல.

ஆனால் இச் சர்க்கார் தேசீயக் கிலி பிடித்து, வர்ணாசிரம வைதீகக் குடுக்கைகளுக்கு சலுகை காட்ட முயற்சிப்பார்களானால் அது யானை தன் தலையின் மீது மண்ணைவாரி இறைத்துக்கொண்டதற்கொப்பாகும். என்றையதினம் இச் சர்க்கார் வைதீகத்துக்கு இடங் கொடுக்கிறார்களோ அன்றையதினமே அவர்களின் இந்திய வாழ்வுக்கு சாவுமணி அடிக்கப்படும் என்றுஎச்சரிக்கை செய்கிறேன். சுதந்திர வெள்ளம் பெருக்கெடுத்து விட்டது. சமூகக் குப்பை கூளங்களெல்லாம் அதனால் மோதி அடிக்கப் பட்டு வருகிறது. இக் குப்பைக் கூளங்களுக்கு யார் ஆதரவு காட்டினாலும் கண்டிப்பாய் அவர்களும் அவ்வெள்ளத்தால் நாசமாக்கப்படுவர். எல்லாம் வல்ல பிரிட்டிஷ் துரைத்தனம் சீர்திருத்தக்காரரின் சுதந்திர வெள்ளத்துக்கு எதிரல்ல. ஆகவே சர்க்காரே சாரதா சட்ட விஷயமாக அதி ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளுமாறு யான் முன்னதாகவே எச்சரிக்கை செய்கிறேன். ஓ சர்க்காரே சமூகச் சீர்திருத்தக்காரர்களுக்கு உன்மீது இருக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்வாயாயின் தேசிய வாதிகளைக் காட்டிலும் அவர்கள் உனக்குக் கொடிய எமனாகவே மாறிவிடுவார்கள். அவர்களுக்கு உன் சைனியங்களும், குண்டுகளும் சிறைச்சாலைகளும் ஒரு எதிராவா.

எச்சரிக்கை! எச்சரிக்கை!!



சிங்கப்பூர் முதலாளி
திருவாளர் ஒ. ராமசாமி நாடார் அவர்கள்

## சுயமரியாதையின் வெற்றி
## கொங்கரபாளையம்
## பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

(ஒரு நிருபர்)

கோபிசெட்டிபாளையம் தாலூக்கா கொங்கர பாளையத்திற்கு அடுத்த கோவில்பாளையம் புதூரிலிருக்கும் உயர் திருவாளர், ப. கந்தப்ப கவுண்டர் அவர்கள் நாளது சுக்கில வருஷம் பங்குனி திங்கள் இரண்டாம் நாள் (15—3—30) சனிக்கிழமை யன்று தன்னுடைய தகப்பனாருக்கு வருஷா, வருஷம் நடந்தேறி வரும் திதியை பார்ப்பனீயம் ஆபாசமான சடங்குகள் முதலியவைகளை ஒழித்து சுயமரியாதை இயக்கத்தின்படி அவருடைய பூங்காவன சோலையில் தனதுடைய தகப்பனார் ஞாபகத்தை உத்தேசித்து வருடக்கொண்டாட்டம் நடத்தினார், பந்துக்களுக்கும், ஏழை சகோதர சகோதரிகளுக்கும் விருந்து செய்தார். இது மிகவும் போற்றதக்கது

## தேவை

தென் இந்தியா விவசாயிகள் சங்கம் லிமிடெட் கோயமுத்தூர்

மேற்படி கம்பெனிக்கு ஆங்கிலம் நன்றாய் எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு கியாஷியர் தேவை. மேற்படி வேலைக்கு சிக்யூரிட்டி ரூபாய் (500) ஐனூறு. மாதச்சம்பளம் ரூபாய் 30-1-35. மற்றவிபரங்களுக்கு மேற்படி கம்பனியின் மேனேஜருக்கு எழுதவும்.

"அலைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 மார்ச்சு மீ 23-ஞ

# தேவதாசி ஒழிப்புச் சட்டம்.

கோயில்களில் பெண்களை பொட்டுக்கட்டுவதைத் தடுக்க சட்டம் செய்யவேணுமாய் திரு. முத்துலக்ஷிமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தை சர்க்கார் நமக்கு அனுப்பி அதன்மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக்கின்றார்கள்.

இதற்காக சர்க்கார் பொது ஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் கோவில்களில் கடவுள்கள் பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி அவர்களையே பொது மக்களிர்களாக்கி நாட்டில் விவசாரித்தனத்திற்கு செல்வாக்கும் மதிப்பும் சமய சமூக முக்கிய ஸ்தானங்களில் தாராளமாய் இடமும் அளித்து வரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகுகாலமாய் இருந்து வருகின்றது. அன்றியும் நாளா வட்டத்தில் இது ஒரு வகுப்புக்கே உரியது என்பதாகி இயற்கையுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலை பெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரிகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ, கோரின அரசாங்கமாகவாவதுஒன் றுஇருந்தால்இந்தஇழிவானகெட்டபழக்கம கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தேசிய வழக்கத்தின் பேராலும் இருந்து வர ஒரு க்ஷணநேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காதென்றே சொல்லுவோம்.

ஆனால் நமது இந்தியாவில் வெள்ளைக்கார ஆட்சி குடி புகவும் நிலை பெறவும் நம் நாட்டுச் சுயநலப்பார்ப்பனர்கள் உளவாளிகளாகவும் உதவியாகவும் இருந்து வந்ததால் அப்பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக வெள்ளைக்காரர்களும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்ததால் அந்தப்பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நடந்து (வெள்ளைக்காரர்கள்) தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டிய அவசியத்தில் பட்டுவிட்டார்கள். இந்தக் காரணங்களால் அவர்கள் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் சீர்திருத்தத் துறையிலாவது மனிதத்தன் துறையிலாவது இதுவரை ஒருவித முற்போக்கான காரியமும் செய்யாமலே இருக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். ஆனால் இப்போது கொஞ்ச காலமாய் அப் பார்ப்பனர்களின் தந்திரத்தையும் [illegible]யும் கண்டு பிடித்து அவர்களது யோக்கியதைகளை அடியோடு வெளியாக்கி சீர்திருத்தங்களை உத்தேசித்து நாமும் வெள்ளைக்காரர்களை மிரட்டக் கூடிய சமயம் மிரட்டியும் ஆதரிக்கக்கூடிய சமயம் ஆதரித்தும் பார்ப்பனர்களில் செல்வாக்கை ஒழித்து நமது சக்தியையும் தீவிர ஆசையையும் காட்ட ஆரம்பித்து விட்டதால் இப்போது ஏதோ சிறிது அளவுக்காவது சர்க்கார் சீர்திருத்தத் துறையில் நமது இஷ்டத்திற்கும் இணங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமையின் பலனே தான் இப்போது நமது கொள்கைகள் சிலது நாட்டில் பிரசாரம் செய்யவும் செல்வாக்குப்பெறவும்இடம் ஏற்பட்டதும் சட்டசபையில் இது சமயம்ஒருமுடிவை பெற்றுதிரவேண்டிய அவசியம ஏற்பட்டு பொது ஜன அபிப்பிராயத்திற்கு வர நேர்ந்ததுமாகும்.

நிற்க, இப்போது திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்டசபைக்குஅனுப்பப்பட்டிருக்கும் பொட்டுகட்டுவதை ஒழிக்கும இந்தமசோதாவானது வெகு காலமாகவேஜன ப்பிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக்கூட்டங்களில் பொதுமகாநாடுகளிலும் கண்டிக்கது பேசப்பட்டிருப்பதுடன் இம்மாதிரி ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று இந்திய சட்டசபை கூட்டங்களிலும் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டும் வந்திருக்கின்றது.

இது சம்மந்தமாக திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் ஒரு துண்டு பிரசுரம் வெளியிட்டு இருக்கிறார். அதன் சுருக்கமாவது

தேவதாசி மசோதா.

இந்த மூடக்கொடுமையை ஒழிக்க ஆரம்பித்த கிளர்ச்சியானது 1868 வருஷ முதல் நடை பெற்று வருகிறது. 1906, 1907 வருஷம் உலக தேசிய மகாநாட்டில், இந்தக் கொடிய கெட்டவழக்கத்தைஒழிப்பதற்காகபல மாகாண சர்க்கார் அபிப்பிராயங்களையும் அறிந்து தம்மால்கூடியவரைஒழிப்பதென முடிவு செய்ததினின்று, இந்தியா கவர்ன்மெண்டும இந்த தேவதாசி மசோதா வில் அதிக சிரத்தை காட்டிவந்தது.

1912 வருஷம் பழய இம்பீரியல் சட்ட நிரூபண சபையில் மூன்று இந்தியஅங்கத்தினர்கள் ,கனம்மாணிக்ஜிதாதாபாய். மூதோல்கர், மேட்கித் ஆகியவர்கள், இந்த கொடிய பழக்கத்தை ஒழிப்பதற்கு இதே எண்ணத்தோடு வேறே மூன்று மசோதாக்கள் கொண்டுவந்தனர். இந்திய சர்க்கார் உள்நாட்டு சர்க்காருக்கு இந்த மசோதாவை அனுப்பி. அவர்களது அபிப்பிராயம் தந்த உடன் 1913 வருஷம் செப்டம்பர் மாதம் தாங்களாகவே ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார்கள். மீண்டும் அம்மசோதா ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அவர்களது ரிபோர்ட்டையும் 1914 வருஷம மாாச்சு மாதம் பெறறார்கள். அந்த ரிபோர்ட் மறுபடியும் இப்போதைப்போலவே பொது ஜன அபிப்பிராயத்துக்கு விடப்பட்டது. இம் மசோதாவை நிறைவேற்றுவதில் எல்லோருக்கும் பூரண எண்ணமிருந்த போதிலும், அத்தகைய பெண்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது போன்ற சில தொல்லை விவாதங்கள் கிளப்பிவிடப்பட்டதால் அம்மசோதா தானாகவே அது சமயம் மறைந்து விட்டது. அதன் பின்னா யகாயுத்தக கிளர்ச்சியினுல் அது கவனிக்கப் பட முடியாமல் போயிற்று. பிறகு 1922 வருஷம் டாக்டர் கோர் மீண்டும் அதை இந்திய சட்டசபையில் கொணடுவந்தார். ஷை தீர்மானத்தின் மேல விவாதம் நிகழ்ந்து கடைசியாக அது மறுபடியும் பொது ஜன அபிப்பிராயத்திற்கு பிரசுரிக்கப்பட வேண்டுமென்ற பிரரேபணை அதிகப்படியான ஓட்டுகளால் தோற்கடிக்கப் பட்டது. பிறகு மேல்படி 1922 ம்வருஷத்திய தீர்மானத்தின் மீது1924 ம்வருஷம் அதை சட்டமாக்கப்பட்ட தேடு அதை அனுசரித்து இந்தியன பினல் கோடு 372, 373 செக்ஷன்கள் திருத்தப்பட்டன. அதன் சட்டம் 1925 ம் வருஷம் ஜனவரி மாதம் முதல்தேதியினின்று அமுலுக்கு வந்தது. ஆதியில் 14 வயதுக்கு மேல் பட்ட பெண்களுக்கு பொட்டுக்கட்டுதல் கூடாதென்றே சாஸ்திரத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது ஏனெனில் பொட்டுக் கட்டப்பட வேண்டிய பெண் சாஸ்திரப்படி கன்னிகையாயிருக்க வேண்டு மாதலால் 14 வயதிற்குள் தான் இந்தச் சடங்கு செய்வதுவழக்கமாக இருந்துவந்தது. அதாவது எந்தப்பெண்ணையும் 14 வயதிற்கு மேல் பொட்டுக்கட்ட எந்தக் கோயில் அதிகாரியும் அனுமதிப்பதில்லை ஆனால் இப்பொழுது மேற்படி சட்டம் வந்த பிறகு 16 வயதிற்கு கீழ்ப்பட்டபெண்களுககு பொட்டுக்கட்டப் பட்டால் கோயிலதிகாரிகள் குற்றவாளிகள் ஆவதோடு அந்த விதமாக அனேக கேஸ்கள் நடந்து அந்த 25 வது சட்டப்படி தண்டனையும் பெற்றிருக்கிறாகள், ஆகவே வைதீகர்களது அபிப்பிராயப்படி பார்த்தாலும் கூட சாஸ்திரப்படி 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு கோவில்களில் பொட்டுக்கட்ட மத அனுமதியில்லையென்று தெரிகிறது. இந்தியன் பினல்கோடு படி ஒரு மைனர் பெண்ணை பொட்டுக் கட்டுவது குற்றமென்றாலும் பேராசையுள்ள பெற்றோர்கள் சிலர் தங்கள் பெண்களுக்கு பொட்டுக்கட்ட கோவிலினிடமிருந்து உத்திரவு பெறறு விடுகிறார்கள். இது விபசாரத்துக்கு அனுமதி கொடுத்ததாகுமேயன்றி வேறில்லை. பொது ஜன அபிப்பிராயம் இதை சட்டமாக்க அனுகூலமாயேயிருக்கிறது. பத்திரிகைகளில் இதை ஆதரித்து எழுதியும பொதுக் கூட்டங்களில் ஆதரித்துத் தீர்மானங்கள் நிறை வேற்றியும், சுமார் 13 வருஷத்துக்கு மேற்பட்ட ஆண் பெண சங்கங்களில ஆதை ஆதரித்து தீர்மானங்கள்நிறைவேற்றியுமஇந்தக் கொடிய பழக்கத்தினால் அலலலுறும் சமூகத்தினரே இதை சட்டமாக்க வேற்புறுத்தி எழுதியும இருக்கின்றனர். டிஸ்டிரிக்டு போர்டு முனிசிபாலிட்டிகளிலும் தங்களது ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனா. இவ்வாறெல்லாமிருக்க இச்சட்டத்திற்கு பொது ஜன அபிப்பிராயத்தை அறிய விரும்புவானேனென்பது விளங்கவில்லை. இந்த நாள்பட்ட கொடிய சமூகக்கொடுமையை ஒழிக்க யாருக்கும் ஆட்சேபணையோ எதிர் அபிப்பிராயமோ இருக்கவே முடியாது. இந்தியத தலைவர்கள் கூறியிருப்பது போல் தேவதாசியென்று ஒரு வகுப்பு இருப்பது இந்துசமூகத்திற்கே இழிவானதுமல்லாமல் இந்து மதத்திறகே பெரும்பழியுமாகும். ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏறபடும் இழிவு, பெண்ணுலகிற்கே ஏறபட்டதாகுமாகையால் இவ்வழக்கம் பெணகளின் அந்தஸ்தையும் கௌரவத்தையும பெரிதும் பாதிக்கக் கூடியதாயிருக்கிறது. அன்றியும் ஒரு குறிப்பிட்டஜாதியையோ,சமூகத்தையோ விபசாரத்திக்கு அனுமதி கொடுப்பதும பின்னர் அவர்களை இழிந்த சமூகமாக கருதுவதும்பெருமசமூகக்கொடுமையாகும். சிறுகுழந்தைகளிலிருந்தே இத்தகைய துராசார வழிகளில் பயிற்றுவிப்பது ஜனசமூக விதிகளையே மீறியதாகும்.

எனவே இப்படிப்பட்ட நிலைமையில் இனி இதைப்பற்றி பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்

தை தெரியவேண்டிய அவசியமே இல்லை.

தவிர இதுவிஷயத்தில்சாஸ்திரசம்மந்தமான வைதீகர்களின் ஆட்சேபணைக்கும் இடமில்லை. ஏனெனில் சாஸ்திரத்தில் 14 வயதுக்கு முன்கன்னிப்பெண்ணுப் இருக்கும்போது தான் பொட்டுக்கட்டவேண்டும் என்று இருக்கின்றது. இந்தியன் பினல் கோட் 372. 373 செக்ஷன்களின் படியோ 18 வயதுக்குள் பொட்டுக் கட்டக்கூடாது என்றும் கட்டினுல் 1 வருஷக் கடினக்காவல்தெண்டனையும் அபராதமும் என்றும் இருக்கின்றது. ஆகவே இது விஷயத்தில்வைதீகமும்இந்துமதமும் 19.4 வருஷத்திலேயேஒழிந்துவிட்டது.இதனால் இப்போதைய வைதீகர்கள் என்பவர்கள்இதைஆ சேபிப்பதானுல் அது அவர்களது சாஸ்திரம் அவர்களுக்குத்தெரியாமல் இருக்கவேண்டும். அல்லது தாசிகள் மூலம் தங்கள் வகுப்பார்களில சிலர் வயிறுவளர்ப்பது கெட்டுபோகுமே என்கின்ற ஜாதி அபிமானமாக இருக்கவேண்டும்.

அடுத்தாப்போல் பொது ஜனங்கள் எந்த விதத்திலாவது இந்த சட்டத்தை ஆட்சேபிப்பார்களா என்றுஎண்ணுவதும் ஒன்முமுட்டாள் தனமாகவோ,அல்லது யோக்கியபோறுப்பற்றத் தன்மையாகவே தான் இருக்கவேண்டும. ஏனெனில் இந்து சமூகத்தில் கடவுள் பேரால மதத்தின் பேரால் விவசாரிகளை ஏற்படுத்தவேண்டும் என்று எந்த சமூகத்தாரோ தேசத்தாரோ கருதுவார்களானுல் அவர்களைப் போல் காட்டு மிராண்டிகளோ கெட்டவர்களோ இருக்கவே முடியாது. மற்றபடி எந்த சமூகமாவது இம்மாதிரியான தொழில் தங்கள் வகுப்புக்கு இருக்கவேண்டுமென்று கேட்பார்களேயானுல் அவர்களைப்போல் சுயமரியாதையற்றவர்களும் இழிகுல மக்களுமவேறுயாரும் இருக்கமுடியாது. எந்தப் பெண்களாவது இந்த தொழிலில் ஜீவிக்கலாம் என்று கருதி அதற்காக சுவாமியையும் மதத்தையும் உதவிக்கு உபயோகப்படுத்த நினைத்தால் அவர்களைப் போல் ஈனப்பெண்கள் வேறு எங்கும் இருக்கவே முடியாது. ஆகவே இந்தச் சட்டம சென்ற சட்ட சபைக் கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டியது மிக்க அவசியமும் யோக்கியமுமான காரியமாகும். ஆனல் அந்தப்படி நிறைவேற்றப்படாமல் இருக்க சட்ட மெம்பர் ஆட்சேபணைகளைக் கிளப்பி இதைப் பொது ஜன அபிப்பிராயத்திற்கு அனுப்புவது என்னும் பேரால் தடைப்படுத்தி விட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும் அதற்கு அனுகூலமாய் ஜஸ்டிஸ்கட்சி அங்கத்தினர்கள் ஓட்டுக் கொடுத்தது அவர்களுக்கு மிகுதியும் மானக்கேடான காரியமாகும். அக கட்சியார்கள் இந்த காரியத்தை கூட செய்ய முடியவில்லையானுல் பின் என்ன வேலைசெய்யத்தான் அந்த சட்ட சபையை நத்திக் கொண்டிருக்கிறார்கள என்பது நமக்குபுலனுகவில்லை"காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில்இல்லாததால்இச்சட்டம் நிறைவேருமல்போயிற்று" என்று திருமதி டாக்டா முத்துலட்சுமி அம்மாள் நமக்கு எழுதி இருப்பதைப்பார்க்க நமக்கு தாங்க முடியாத அவமான மாகவே இருந்தது.

எம்படியானுலும் அடுத்த சட்ட சபைக்கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேருமல போகுமேயானுல்சர்க்காரின்யோக்கியத்திலும் ஜஸ்டிஸ் கட்சியாரின் சுயமரியாதையிலும் தெருவில் போகின்றவனுக்குக்கூட மதிப்பும் நம்பிக்கையும் இருக்காதென்றே சொல்லுவோம்.

## அறிவிப்பு

அடுத்தவாரம் முதற்கொண்டு "குடி அரசு" இருபது பக்கங்களுடன் வெளிவரும்.

---

திரு. எஸ், இராமநாதன் அவர்கள் மகாநாடு காரியம் நடத்த ஈரோடு வந்திருக்கிறர்.

## சாரதா சட்டம்

சாராதா சட்டம் இந்தியசட்ட சபையில் திருத்தப்படும் என்றும் ஏப்ரல் முதல் அமுலுக்கு வருவது ஒத்திவைக்கப்படும் என்றும் ஒரு வதந்தி கிளப்பி விடப்பட்டிருக்கிறது.

ஆனல் சென்னை சர்க்கார் அச்சட்டத்தின் பிரதிகளை பொது ஜனங்களுக்கு வினியோகித்திருப்பதுடன் பத்திரிகைகளிலும் வெளியிட்டிருக்கிறார்கள், எனினு எப்படி நடக்கும் என்று சொல்வது முடியாத காரியமாயிருந்தாலும் இவ்விஷயத்தில் சர்க்கார் ஏதாவது பின் வாங்கினுர்களேயானுல் அதன் பலனை கண்டிப்பாய் அடைவார்கள் என்பதை மாத்திரம் நாம் உறுதியாய் நம்பி இருக்கிறோம்.



ஈபோவில் கூடிய மலேயா தமிழர் மகாநாட்டுத்தலைவர் டாக்டர் ஐ. மகமட் கவுஸ ஜே பி அவர்கள்

## 'விபூஷண ஆழ்வார்'

இதிகாசம் என்னும் தலைப்பின் கீழ் ராமயண ஆபாசம் என்று இதுவரை பால காண்டம்அயோத்தி காண்டம ஆரண்ய காண்டம் கிஷ்கிந்தா காண்டம் சுந்திர காண்டம் ஆகிய ஐந்து காண்டங்கள் முடித்து ஆராவது காண்டம் துவக்கப்பட்டிருக்கின்றது வாசகர்களுக்கு தெரியும். அவற்றுள் இந்த மலரில் வரும் யுத்த காண்டம் 2 வது கட்டுரையை வாசகர்கள் சற்று ஊன்றி பொருமையுடன் வாசித்து பார்க்கவேண்டுகின்றோம்.. ஏனெனில் இதனுல் "ஸ்ரீவிபூஷண ஆழ்வாரின்" யோக்கியதையும் "ஸ்ரீ ராமரின்" யோக்கியதையும் இவர்கள் இருவருக்கும் உண்டான பக்தன்-பகவான் சம்மந்தமும் நன்ருய் விளங்கும்.

## ஓர் மறுப்பு'

திரு.ஈ. வெ.இராமசாமி அவர்கள் கீழ்க்கண்ட மறுப்பை பத்திரிகளுக்கு தந்தி மூலம் அனிப்பியிருக்கிறார். அதாவது:—

இருபதாந் தேதி வெளிவந்த சென்னை தினசரிப் பத்திரிகைகளில் ஆயிரக்கணக்கான சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்கள் உப்புவரியை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக ஒரு செய்தி வெளி வந்திருப்பதைப் பார்த்தேன். யாராவது தன் சொந்த ஹோதாவிலோ அல்லது வேறு ஹோதாவிலோ உபபுச் சட்டத்தை மீறுவதைப்பற்றி எனக்கு ஆட்சேபமில்லை. ஆனல் சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் யாராவது உப்புச் சட்ட மறுப்பு செய்யத் தொடங்கினுல் அம்முயற்சி சுயமரியாதை இயக்கத்தால் ஆதரிக்கப் பட்டதாகாது. அவ்வியக்கத்தின் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவர் என்கின்ற முறையில் எனக்காவது சுயமரியாதை சங்கத் தலைவருக்காவது அதில் சம்பந்தமே கிடையாது. உப்புச் சட்டத்தை மீறுவதென்பதை இதுசமயம் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.உப்புச்சட்டத்தை மீறுவதனுல சுயமரியாதை இயக்கத்துக்கு எத்தகைய நன்மையும் உண்டாகாது.

## ஆதிதிராவிடர்களுக்கு பிரைஸ்

இவ்வார சென்னை சட்டசபை வரவு செலவு திட்டத்தில் திரு. வி. ஐ. முனுசாமி பிள்ளை அவர்கள் ஆதிதிராவிடர்களுக்கு அவர்கள் எண்ணிக்கைக்கு தகுந்தபடி உத்தியோகமளிபபதில்லை யென்று குறை கூறியதற்குபதிலாக அரசாங்கத்தார் சார்பாக சீப் செக்ரட்டரி அவர்கள் அந்தப்படி உத்தியோகங்கள் கொடுக்கும் விஷயமாக அரசாங்கத்தாரால்யோசனைகள் செய்யப்படடு வருவதாகவும் உத்தியோகங்களைப்பெற்றுக் கொள்ள ஆதிதிராவிடர்கள் முன்வரவேண்டும் மென்றும்பதிலகூறினுர்கள். இது மன பூர்வமாய் சொல்லப்பட்டபதிலனுல இதிலிருந்து இப்போது எல்லாவிதத்திலும் தகுதியுடன் இருந்து முன் வந்திருக்கும் திரு. ராவ் பகதூர் யம. சி. ராஜா அவர்களுக்கு சமீபத்தில் காலியாகும நிர்வாகசபை மெமபர் பதவி கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றமாகாது என்று நினைக்கின்றோம்.

## ஜஸ்டிஸ் கக்ஷி.

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்கின்ற தீர்மானம் ஒன்றை நிர்வாகக்கமிட்டிதலைவருக்கு திருவாளர்கள் பி. எஸ். குருசாமி நாயுடு அவர்களும், எம். தாமோதர நாயுடு அவர்களும் அனுப்பியிருக்கின்றார்கள். அதாவது

"தற்கால நிலைமை மாறுதல்களை உத்தேசித்து பார்ப்பனர்களை தென் இந்திய நலவுரிமைச்சங்கத்தில் அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், இதற்காக ஒரு விசேஷ மகாநாடு [ஸ்பெஷல் கான்பரன்ஸ்] கூட்ட வேண்டுமென்றும் இக்கமிட்டி தீர்மானிக்கின்றது" என்பதாகும்.

இப்பொழுது மேல்கண்ட இந்த தீர்மானத்தை அனுப்பியிருக்கும் கனவான்களே நெல்லூரில் பார்ப்பனர்களை சட்டசபை நடவடிக்கை கட்சியில் சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபணை இல்லை என்கின்ற தீர்மானத்தை எதிர்த்தவர்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் இப்போது பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியிலேயே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்திருப்பதற்குக் காரணம் "தற்கால நிலைமையை உத்தேசித்து" என்று தான் சொல்லுகின்றார்கள். பார்ப்பனர்களை சேர்த்துத்தான் ஆகவேண்டும் என்கின்ற அளவுக்கு தற்கால நிலைமை எப்படி மாறுதல் அடைந்திருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. சென்ற சட்டசபை தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியில் பலர் தோல்வி அடைந்து மந்திரி பதவியை இழக்க நேர்ந்தது முதல் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணமும் காங்கிரசில் சேரவேண்டும் என்கின்ற எண்ணமும் அக்கட்சி பிரமுகர்கள் ஒவ்வொருவர் மனதிலும் துடித்துக்கொண்டேதான் இருந்தது. காங்கிரசில் சேர்ந்தால் சாதித்துவிடலாம் என்கின்ற எண்ணத்தைப் பரீட்சித்துப்பார்க்க கோயமுத்தூர் மகாநாட்டில் தாராளமாய் இடம் கொடுத்தோம். அதுபோலவே பலர் காங்கிரசுக்கும் போய் அதன் பலனையும் அனுபவித்துப் பார்த்து விட்டு இரண்டாம்பேர் அறியாமல் வீடுவந்து சேர்ந்தார்கள்.

அதுபோலவே இதற்காக கூடும் மகாநாட்டில் நாம் இந்த தீர்மானத்தையும் மகாநாட்டில் ஆட்சேபிக்கப்போவதில்லை. மற்றவர்கள் ஆட்சேபிப்பதையும் நாம் தடுக்கப்போவதில்லை. அதன் சம்பவத்தை அதுவே அடையட்டும் என்றுதான் ... விட்டுவிடப்போகின்றோம். ஏனெனில்,

சமீபத்தில் தான் கோயமுத்தூரில் திருவாளர்கள் பி. முனுசாமி நாயுடு, பி. டி. ராஜன், ஆர். கே. ஷண்முகம், சி. எல். நரசிம்மசாமிமுதலியார், ஏ. ராமசாமிமுதலியார், ஈ. வெ. ராமசாமி ஆகியோர்கள் கூடி பார்ப்பனர்களை அங்கத்தினர்களாக சேர்ப்பதா என்கின்ற விஷயமாய்ப் பேசி "வேண்டுமானால் அரசியல் சட்டசபை நடவடிக்கைகளில் [பொலிட்டிக்கல் கவுன்சில் பார்ட்டியில்] சேர்த்துக்கொள்ளலாம்" என்றும் "ஜஸ்டிஸ் கட்சியில் கண்டிப்பாய் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது" என்றும் பேசி முடிவு கட்டிக்கொண்டு அதை அடுத்தாப்போல் ஒரு விசேஷ மகாநாடு கூட்டி தீர்மானிப்பதென்றும் ஒப்புக் கொண்டுபோனார்கள். ஆனால் அத் தீர்மானம் இனியும் ஒரு மாதம் ஆவதற்குள் "தற்கால நிலைமையை உத்தேசித்து" என்று மறுபடியும் அந்த விஷயத்தைக் கிளப்பியிருப்பதானது

ஆச்சரியப்படக் கூடியதேயாகும். அன்றியும் இப்போது சென்ற காலமாய் ஜஸ்டிஸ் கட்சிக்கு சற்று அதிக செல்வாக்கு ஏற்பட்டு இதுசமயம் அதில் கொஞ்சம் அதிகமான மெம்பர்கள் சேர்ந்து கட்சியின் கூட்டம் தாங்கமுடியாத அளவுக்கு கும்பலாகி நெருக்கம் ஏற்பட்டு விட்டதாலும் அந்த நெருக்கத்திற்குத் தகுந்தபடி போட்டிகளும் பலமாய் விட்டதாலும் எப்படியாவது அதன் கூட்டத்தைச் சற்றுகலைத்து சிலரைவெளியாக்கி நெருக்கத்தைக் குறைத்து போட்டியைக் கம்பிப்படுத்தவேண்டும் என்கின்ற எண்ணம் சில "தலைவர்களுக்கு" ஏற்பட்டுவிட்டதால் இத்தீர்மானம் அக்கட்சிக்கு ஒரு கொள்கையில் நிற்பதோ அல்லது ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டிருப்பதோ மிகவும் முடியாத நிலைமைக்கு போய்க்கொண்டிருக்கவேண்டியதாகிவிட்டது. ஆதலால் அடிக்கடி சேமே முட்டுக்கட்டையாய் இருந்ததாகக் காட்டிக்கொள்ள இஷ்டமில்லை. இந்த நிலையில் அந்தத் தீர்மானம் கொண்டுவந்திருக்கும் கருத்தைப்பார்க்கும்போதும் திருவாளர்கள் சி. பி. ராமசாமி அய்யருடன் டி. ஆர். ராமச்சந்திர அய்யரும் போட்டியன்றி தெரிந்தெடுக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்போதும் அனேகமாய் விசேஷமகாநாட்டில் இத் தீர்மானம் நிறைவேற விடலாமென்றே நாம் நினைக்கின்றோம். எப்படியானபோதிலும் அது விஷயத்தைப்பற்றி நாம் இப்போதே நமது அபிப்பிராயத்தை சிறிதும் ஒளிக்காமல் சொல்லிவிடுகின்றோம். அதாவது பார்ப்பனர்களை தென் இந்திய நலவுரிமைச்சங்கத்தில் அங்கத்தினர்களாய்ச் சேர்த்துக்கொள்ளப்படுமானால் பார்ப்பனரல்லாதார் கட்சி என்று வழங்கும் ஜஸ்டிஸ் கட்சி தொலைந்தது என்பதேதான் நமது முடிவு. அதாவது இத் தீர்மானத்தின் பயனால் ஏதாவது இரண்டொரு பணக்காரர்களோ சூட்சிக்காரர்களோ சில பெரிய உத்தியோகங்களையும் பதவிகளையும் அனுபவிக்கலாமே யொழிய பதினாயிரக்கணக்கான படித்த வாலிபர்களின் கதியும் சமூக சமத்துவ முற்போக்கின் கதியும் இனி அதோ கதிதான் என்பதும்.

வெகு கஷ்டப்பட்டு நிதானமாய் முன்னறிவந்த இம் மாகாண பார்ப்பனரல்லாத சமூக நிலை இனி வெகு வேகமாய் பின்னேக்கி விடுமென்பதுவும் உறுதி! உறுதி!! அன்றியும் அக்கட்சியில் கொள்கையோ நாணயமோ யோக்கியப் பொருப்போ சிறிதும் கூட இனி இருக்கவும்முடியாது என்பதும் நமது உறுதி.

## இங்கிலீஷ் ஸ்வபோதினி.

நூதன மாதப் பத்திரிகை—ஆங்கிலத்தை எளிய நடையில் போதிப்பது, தமிழில் உச்சரிப்பும் அர்த்தமுங்கொண்டது. தேசச் செய்திகள், கதைகள், சம்பாஷணைகள் இலக்கணப் பகுதிகள், வியாபாரப் பகுதிகள் கோர்ட்டு செய்திகள், யாவும் அடங்கியவை. ஆங்கிலத்தை அறிந்து கொள்ள இம்மாத சஞ்சிகை இன்றியமையாதது.

ஆறுமாத சந்தா உள்நாடு ரூ. 1-0-0
,, வெளி நாடு ,, 1-4-0

சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பி பத்திரிகையைப் பெறலாம்.

வி. என். ரங்கசாமி அய்யங்கார்
திருநாவுக்கரசு பிரஸ்,
ஆரணி, வட ஆற்காடு

### சாத்தூக்குடி

மா. வே. ஷண்முகவேல் நாடார் வாசகசாலையில் 9-3-30 தேதி ஜெனரல் மீட்டிங் கூட்டி வாசகசாலை நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர் திரு. வே. க. அ. அ... நாடார் காரியதரிசி ... கா. அ. பெரியசாமி நாடார் அ. து. சின்னசாமி நாடார் மற்றும் கனவான்கள் உபதலைவர் ஆடிட்டர் சூப்பரவைசர் நிர்வாக அங்கத்தினர் ஆகிய ஸ்தானங்களுக்கு தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

## 104 பஞ்சமர்கள் குடும்ப சகிதம் மத மாற்றம்

### பள்ளிக்கூடம் ஸ்தாபிக்க வாக்குறுதி

நமது நிருபர்

திண்டுக்கல்லுக்கு 10-மைலுக்கு வடக்கேயுள்ள மாம்பாடி முதலிய கிராமங்களில் வசிக்கும் சுமார் 104 பஞ்சமர்களும் சக்கிலிகளும் இன்று குடும்ப சகிதம் கிருஸ்துவ மதத்தில் சேர்ந்தனர். கத்தோலிக்க பாதிரிகள் அவர்களுக்கு புது வஸ்திரங்கள் அளித்தனர். அவர்களுக்கென ஒரு தனி பள்ளிக்கூடமும் கட்டுவதாக பாதிரிகள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 400 குடும்பத்தாருக்கு மேல் கிறிஸ்து மதம் மூழ்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிகிறது.

### திருவிதாங்கூரில் பார்ப்பன ஆதிக்கம்.

...மே குப்பரின்டெண்டு திரு. ஆர். வெங்கடராம தீக்ஷதர், காலஞ்சென்ற திருவனந்தபுரம் தேவஸ்வம் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### ... பட்டர் வொர்த்

பட்டர் வொர்த் சுயமரியாதைத் தொண்டர், திரு. நா. நாகப்பன் அவர்கள் தனது மனைவியாருடைய தலை திதியாகிய கருமாந்தத்தை சென்ற 16-2-30 தேதி பிராமண புரோகிதரைத் தவிர்த்து, நடாத்தி ஏழை மக்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் அருசுவை உண்டி அளித்து சிறப்பித்தார் வந்திருந்தவர்கள் எல்லோரும் இவரைப் போலவே காரியத்தில் செய்து காட்ட வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள். ஒரு நிருபர்.


## எக்ஸ்ரே—குழாய்
(X - RAY TUBE)




இது மேல் நாட்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருவி. மிகவும் உபயோகமானது. இதன் மூலம் கைகளையோ விரல்களையோ பார்த்தால் உள்ளே ஓடும் எலும்புகள் தெரியும். ஒரு பென்சிலைப் பார்த்தால் உள்ளே இருக்கும்லெட்தெரியும்செடிகொடிமுதலானவைகளின் அடிப்பாகத்தைப்பார்த்தால்உள்நரம்புகள்தெரியும் முட்டையினுள்இருக்கும்கரு தெரியவரும். இதனால்முட்டைநல்லதா கெட்டுப்போனதாஎன்றும்உடனே சொல்லிவிடலாம். இன்னும் பலவிதங்களிலும்உபயோகமானது. இவ்வளவும் உண்மையில்லையென்று நிரூபிப்பவர்க்குப பணம்வாபீஸ்செய்யப்படும். ஸ்டாக் கொஞ்சம் இன்றே எழுதுங்கள். விலை டியூப் 1-க்கு ரூ. 1-14-0

ஈஸ்டு வேஸ்டு ஏஜன்சி, தபால் பெட்டி 295, மதராஸ்.

## கொ. இலட்சுமிபுரம்

ஸ்ரீ மீனாட்சி சங்கம்;- 10-3-30 காலை ஒன்பதுமணி முதல் இச்சங்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா இராமனாதபுரம் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு திருவாளர் டப்பிள்யூ. பி. எ. சௌந்திரபாண்டியன் அவர்கள் எம். எல். சி. தலைமையில் நடை பெற்றது. தலைவர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு கடவுள் வாழ்த்து பாடியதும், திரு; ப. மு. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களால் தலைவருக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டு காரியதரி அவர்கள் அறிக்கை வாசித்தார்கள்.

திரு. பொ. திரிகூடசுந்தரனார் அவர்கள் "கல்வியின் நோக்கம்" என்பதுபற்றியும் மகிபாலன்பட்டி திரு. மு. சின்னையா செட்டியாரவர்கள் "நான் கண்ட கனவு" என்பது பற்றியும் பேசியபின் சொ. வி, மாணக்கர் மாணக்கியரால் "சோதிடர் தாசில்தார் உத்தியோகம் பெற்றது." என்னும் ஓர் ஹாஸ்ய நாடகம் நடிக்கப் பெற்றது. தலைவர் அவர்கள் முடிவில் பல விஷயங்களை உயர்ந்த கருத்துக்களுடன் கூறியதும், திரு. ராம சுப்பிரமணியன் அவர்கள் வந்தனம் கூறி, மாலையிட கூட்டம் முடிந்தது. பகல் ஒரு சமபந்தி விருந்து நடந்தது.

## சொக்கலிங்க வித்தியாசாலை

இவ்வித்தியாசாலையின் மூன்றுவது ஆண்டு நிறைவு விழா 10-3-30 பிற்பகலில் நடை பெற்றது. இராமனாதபுரம் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு திரு டப்பிள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டியன் அவர்கள் எம். எல். சி. தலைமையில் வித்தியாசாலை மாணக்மாணக்கியரால் "மலர் வேய்ந்த கொள்ளு மணம்" என்னும் ஓர் நாடகம் நடிக்கப்பெற்றது. பின்னர், மாணக்கர் மாணக்கியரால் பாட்டு, பேச்சு, நடிப்பு, கோலாட்டம், கும்மி முதலியன நடிக்கப்பெற்றன. பரிசளிப்பு முடிந்ததும், தலைவரவர்கள் முடிவுரை கூற, வந்தன வாழ்த்துடன் சபை, இரவு 9-30 மணிக்கு இனிது நிறைவேறியது. பின்னர் சமபந்தி போஜனம் நடை பெற்றது.

## ருஷிய நாஸ்திக சங்கம்
### லட்சம் மெம்பர்கள் சேர்க்க முயற்சி.

ஈஸ்டர் விடுமுறை நாட்களில் இரண்டு மாதம் தொடர்ச்சியாக கடவுளையும் கோவிலையும் எதிர்த்து பிரசாரம் செய்ய நாஸ்திக சங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். குருட்டுநம்பிக்கைகளை விளக்கிக் காட்டும் நாடகங்கள் நடத்துவதும் கேலிக் கூட்டங்கள் கூட்டுதல், போட்டிப்பரிசுகள், பிரசங்கம் செய்தல் முதலியனவே அவர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகள். சங்கத்திற்கு மெம்பர்கள் லட்சம் சேர்க்க வேண்டுமென்பது அந்தச் சங்கத்தார் லக்ஷியம்.

## சென்னை மாகாண சமூக சீர்திருத்த சங்கம்

எல்லா இந்திய சமூக சீர்திருத்த சங்கத்திற்கு கிளையாகசென்னையில் ஒரு கிளை ஸ்தாபனம் ஏற்படுத்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் அம்மை அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடி திருவாளர்கள் டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரி ஆனரபிள் ஏ. ராமசாமி முதலியார் ஈ. வெ. ராமசாமி, ஆர். கே. ஷண்முகம் யம், யல், ஏ, பி. வரதராஜுலு எஸ். பாசில் அப்துல் அமீத்கான் யம். யல். சி. ஸ்ரீமதிகள் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டியார் யம். எல். சி. (ஜஸ்டிஸ்) வெங்கிட சுப்பராவ் அம்மாள் (டாக்டர்) லட்சுமி அம்மாள் முதலியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

## திருவாளர் கே. சுந்தரம்செட்டியார்
### ஹைகோர்டு நீதிபதியானார்.

ஹைகோர்ட்டு நீதிபதி சர் சி, வி. குமாரசாமி சாஸ்திரியார் ரஜா எடுக்கப்போவதில் அவரது ஸ்தானத்துக்கு ராஜாங்க சபை மெம்பராக ஸ்பெஷல் டியூட்டியிலிருக்கும் ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜ் திரு. கே. சுந்தரம் செட்டியார் ஆக்டிங் நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டிருப்பதை யறிந்து சந்தோஷிக்கிறோம்.

## சுயமரியாதைத் திருமணம்
### வையூர் மீனாட்சிபுரம்

திரு. இராக்காச்சித் தேவர் குமாரன் சங்கரலிங்கம் அவர்களுக்கும் திருமதி சீவிலி தேவர் குமாரத்தி பூங்காவனத்தாய மாளுக்கும் சுயமரியாதை கொள்கையுடன் திருமணம் நடந்தேறியது. அது சமயம் மணமகன் சுயமரியாதையின் தத்துவங்களை நீண்டநேரம் எடுத்துக்கூறினார். சுயமரியாதை பாடல்கள் பாடப்பட்டன. குடி அரசுக்கு ஒரு ரூபாய் அளிக்கப் பெற்றது. என்று எஸ். யு. யு. பாண்டியன் எழுதுகிறார்.

## நன்கொடை

நாகை தாலூகா போர்டு தலைமை குமாஸ்தா டி. எம். ராஜகோபால் பிள்ளை 18-3-30 செவ்வாய்க்கிழமையன்று தனது தகப்பனாரின் திதியை சுயமரியாதை முறையால் செய்து அதாவது நண்பர்களுக்கும் ஏழைகளுக்குமாக சமபந்தி போஜனமளித்து நடத்தி திராவிடனுக்கும், 'குடி அரசு'க்கும் ரூ. 1 வீதம் நன்கொடையளித்தார்.

## ராவ் பகதூர் குமாரசாமி செட்டியார்

திருவாளர் ராவ்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் அவர்கள் சென்னைநகரத்தொகுதியில்பெருமித ஓட்டர்களால் இந்தியசட்டசபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டார்.

## நன்மொழிகள்.

(கோலப்பன் கூறுவது)

அடிமையாய்வாழ ஆசைகொள்ளாதே.
ஆலயங்கொள்ளையடிக்குமிடமே
இதிகாசம்நம்பினால் கதியில்லைநமக்கு.
ஈனச்சாதி யென்றொன்றில்லை.
உயிர்போனாலும் உரிமையையிழவேல்.
ஊழைநம்பினோர் கோழையெனப்படுவர்.
ஏய்த்துப்பிழைத்த லிளிப்பளியாது.
ஐயரென்றோரைப் பொய்யரென்றறி.
ஒற்றுமையொன்றே உயர்வளிக்கும்.
கல்லிற்கடவுள் இல்லவேயில்லை.
காவித்துணியே கள்ளர்க்கறிகுறி.
கீழ்மேல்ஜாதி கெடுத்ததுநாட்டை.
குருட்டுநம்பிக்கை யறவேயகற்று.
கைலாசம்வைகுண்டம் காசுபறிக்குந்தந்திரம்.
கோயில்களென்பது குச்சுக்காரிகள் வீடு.
சமத்துவமொன்றே மகத்துவம்நல்கும்.
சுயமரியாதையே சுதந்திரமளிக்கும்
சூத்திரனென்றால் ஆத்திரங்கொண்டடி.
தற்பைப்புல்லை யற்பமென்றெண்ணு.
திருடருக்கழகு திருநீறடித்தல்.
தெய்வத்தைக்காக்கத் தீவிரம்வேண்டாம்.
தேசமுன்னேறத் தீண்டாமைவிலக்கு
நன்மையைச்செய்வோனே நாத்திகனுவான்.
நாத்திகப்பட்டம் காத்திருந்துபெறு.
நிதியைக்கவரத் திதியைக்காட்டினர்.
பகுத்தறிவையெதிலும் பயன்படுத்திவாழ்.
பார்ப்பனமக்களி னேய்ப்பில்விழாதே,
பிதிர்லோகமென்பது பார்ப்பனர்வயிறே.
புரட்டும்புழுகும் பொதிந்ததுபுராணம்.
பூணூலணிவது பேதையற்கறிகுறி.
பெண்ணையடிமை எண்ணுவர்மடையர்.
பேதைமையென்பதைப் பெண்ணைவிட்டகற்று.
மாதர்முன்னேற்றமே மாநிலமுன்னேற்றம்.
மோக்ஷமும்நரகமும் மூடர்கள் மனமே.
ராமாயணத்தில் ஏமாறுதே.
வயற்றுப்பிழைப்பிற் கியற்றினர்சாஸ்திரம்.
வேதமென்பது சூதுநிறைந்தது.
வையகத்துயிர்களையே தெய்வமெனக்கருது.




தாது புஷ்டிக்கு
பழநி, சி. எம். சாமி,
மன்மத குளிகை

அநேக பரிசுகள்பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, போக சக்தி இவற்றைத் தரவல்லது. பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும்.

60 குளிகைக்கு ரூ. 5. 30 குளிகை ரூ. 3

அன்னிய நாட்டார் ரூ: 5 முன் பணம் அனுப்பவேண்டும்.

சி. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை பழநி, S. I.

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

"காந்தும் ஆனையில் கான்முதல் வீரரும் கவியின்
வேர்தாம் என்றிவர் விளிந்தவா கேட்டு அன்று விலங்கல்
நிந்தவாகண்டும் அரக்கரைச் செருவிடை முருக்கி
போந்தவா கண்டும் நான் இங்குப் புகுந்தது புகழோய்!"

என்று கூறுகிறார். இப் பேதையா நல்லவன்?

அனுமான் இராமனிடம் வீடணனைப் பற்றிக் கூறும்போது அவனுடைய வீடு "அந்தணர் இல் எனப் பொலிந்தது" என்று கூறினதாகக் கம்பர் கூறுகிறார். இது வால்மீகி கூறாதது. மேலும் இது கம்பர் செய்த குறும்பெனவே கூறுதல் வேண்டும். பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு மிக உதவி செய்தவர் கம்பரே! இதன் அடிக் குறிப்பில் திரு. சண்முகம் பிள்ளை யென்பார் "இக் கவியால் அந்தணர்களூனும் கள்ளும் உண்ணுதார் என்பது நன்கு விளங்குதல் காண்க." என்று எழுதியிருக்கின்றார். வேள்வி என்று பெயர் வைத்துக்கொண்டு முழு ஆடுகளைக் காபடித்துக் கொன்று நெய்யில் பொரித்து விழுங்கி சுரா என்னும் கள்ளைக் குடிக்கும் பார்ப்பனரல்லரோ இவர் இவைகளெல்லாம் உலகை ஏமாற்றும் பொய்யுரைகளே;

இராமன் வீடணனைக் கண்டவுடன் அவனை மார்போடு அணைத்துக் கொண்டு அவனை வசப்படுத்தினான் என்று வால்மீகி கூறுகிறார். இச்செயல் இராமனுடைய பிறவிக் குணம் என்பதையும் இதனாலேயே இராமன் தசரதனையும் குகனையும் சுக்கிரீவனையும் முக்கியமாக அனுமானையும் தன் வசப்படுத்தினான் என்பதும் நாம் முன்னரே பல இடங்களில் விளக்கினோம் கம்பரோ இராமன் வீடணனைத் தழுவினதுபோலத் தோன்ற எழுந்தனன் என்று கூறுகிறார். கடவுளாகிய இராமன் அரக்கப்பதராகிய வீடணனைத் தொட்டுத் தழுவுதல் அவனுடைய உயர் நிலைமைக்குத் தகாதெனக் கம்பர் எண்ணினார் போலும்;

கடல் நீரைக் கொண்டுவரச் சொல்லி இலக்குவனால் வீடணனுக்கு இராமன் முடி சூட்டினனென்ன வால்மீகி கூற கம்பர் இராமனுடைய அடிகளையே பரதனைப் போல வீடனன் தலையில் அணிந்து கொண்டானென்றும் அவனை விமானத் தேற்றி வானரர் வலம் வந்தனரெனவும் புதுவது புனைந்து கூறினர். இதுவும் இராமனுக்குப் பெருமை உண்டாகுமுகத்தானேதான் அவர் செய்தார்.

வீடணன் அடைக்கலப் படலம் பாடல் 127 ல் "இனி சூரியன் இலங்கை மீது ஓடுவன்'; என்று வீடணன் கூறியதாகக் கம்பர் கூறுகிறார். சூரியன் இராவணனுக்காக இலங்கையை விலகி விட்டோடினான் என்பதும் இனி இலங்கைமேல் ஓடுவானென்பதும் உலகியல் அறியாதார் கூற்றென்பதை அறிஞர் அறிவர். சூரியன் தலைக்கு மேல் வராத இடத்தில் இலங்கை இருந்தது என்பதை வேண்டுமானால் இராவணனுக்கு அவன் அஞ்சி வருவதில்லை என்று கவி கற்பிப்பது இயற்கை. இயற்கைக்கு மாறாக எழுதுவதை வேறு என் என்பது?

மந்திரப் படலம் முதல் பாடலில் எரிந்த இலங்கையை தேவதச்சன் இயற்றினன் என்று கூறிய கம்பர் அதற்கு மாறாக இலங்கை கேள்விப் படலம் 68 வது பாடலில் "இராவணன் ஏவ பதுமத்தண்ணலே பண்டு போல் அந்நகர் படைத்தான்" என்று கூறினார். இலங்கை எரிந்ததென்பதே பொய் என்பதை முன்னர் நிலை நாட்டினோம். பொய்யை மெய்யாகக் கூறவந்ததனாலேயே கம்பர் முன்னுக்குப் பின் முரணாகக் கூறினார். மேலும்! இலங்கை எரிந்ததால் இராவணன் விண்ணில் எழு நாள் இருந்தனனென வீடணன் கூறியதாகவும் கம்பர் கூறினார். இதுவும் அவர் முன்னர் கூறாத புதுப் பொய்யாம். இனி மேற் செல்லுதும்.

---

# திருச்சியில்
# வைக்கம் வீரர்
## திருவுருவப்படத் திறப்பு விழா

### திரு விஸ்வநாதம் திறந்துவைத்தார்

16-3-30 தேதி மாலை 6-மணிக்கு திருச்சி பாலக்கரையில் கத்தோலிக் சீர்திருத்த வாசகசாலையின் முன் கொட்டகையிட்டு வாழை மரம் தோரணம் கொடி முதலியவைகளால் சிறப்பாக அலங்கரிக்கப்பெற்று மிக்க அதிகமான ஆண்களும் பெண்களும் கூடியிருந்தனர். திருவாளர்கள் ஜே. எஸ். ராமானுஜம் பி. ஏ. பி. எல். டி. பி. வேதாசலம் பி. ஏ. பி. எல்., டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல்., கோவிந்தராஜுலு பி. ஏ. பி. எல்., கே. ஏ. பி. விசுவநாதம் மாஜி முனிசிபல் கௌன்சிலரும் திராவிடத் தொண்டருமாகிய திரவியம், பிராமணரல்லாத வாலிபர் சங்கக் காரியதரிசி டி. எம். மாணிக்கம், பீமநகர் மு. சு. மணி முதலியவர்களும், ஆதிதிராவிட சமூகத் தலைவர்களும், தொண்டர்களும் காத்தோலிக்கப் பிரமுகர்களும், முகம்மதியர்களும், இந்துக்களும் கூடி நிறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

திரு. டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகித்தார்கள். சீர்திருத்தச் சங்கக் கத்தோலிக் மாணவர்கள் இருவர் சுயமரியாதை இயக்க சம்மந்தமான பாடல்களை இன்னிசைக் கருவிகளோடு மிக அருமையாகப் பாடினார்கள். அவர்களுடைய பாடல்களில் ஜாதிச் செருக்கு, சமயப்பூசல், சடங்குத்தொல்லை. சாமிச் செயல்கள், குருட்டு வழக்கம் குருக்கள் மோசம், தன்மதிப்புக் கொள்கை, தரகர் கொடுமை முதலியவைகள் அனைத்தும் பொலிந்து தோன்றின.

தலைவர்கள் முன்னுரையாகப் பல பொருள் குறித்து இனிய தமிழ் மொழியில் பேசியதோடு, திறப்பு விழா சம்பந்தமாகவும், நாயக்கர் இந்நாட்டுக்கு செய்த சேவையைப் பற்றியும், படத்தைத் திறந்து வைக்கும் திரு. விசுவநாதம் அவர்களைப்பற்றியும் சபைக்கு நன்றாக விளக்கிக்கூறி திரு விசுவநாதம் அவர்களை தலைவர் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பலத்த கரகோஷத்தினிடையே திரு விசுவநாதம் அவர்கள் எழுந்து படத்தைத் திறந்து வைப்பதற்கு முன்னர் படந்திறக்கும் நோக்கம், இப்பெரியார் படத்தை திறப்பானேன், அவர் வாழ்க்கை, அவர் அறிவு, அவர் இயக்கம், அவர் பத்திரிகை, அவர் செய்த தொண்டு, மகாத்மாவுக்கும் பெரியாருக்கும் உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் என்ற விஷயங்களைத் தொடர்ச்சியாக முறைப்படுத்தி கேட்போர் மகிழ்ந்துறுகுமாறு பேசி படத்தைத் திறந்து வைத்து மலர்மாலை சூட்டினார்கள். படத்தைத் திறந்து வைக்கும் பொழுது குழுமியிருந்த மக்கள் காது செவிடுபடும்படி கையொலி செய்ததானது சுயமரியாதை சங்கத்தின் மீதும் நாயக்கரின் மீதும் கத்தோலிக்க கிறிஸ்து வமதத்தினருக்குள்ள அன்பையும் ஆர்வத்தையும் மிகுதி விளக்குகியது.

படத்தை திறந்து வைத்த பின்னர் திரு. விசுவநாதம் அவர்கள் இப்படத்தைத் திறந்து வைத்ததினால் இப்பெரியாரின் கொள்கைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களென்றும். இவ்வியக்கத்தின் கொள்கைகள் பலவென்றும் அவை ஒவ்வொன்றும் நம் நாட்டிற்கும் மக்களுக்கும் பெரிதும் நன்மை பயக்குமென்றும் நமது நாட்டில் ஒரே விடத்தில் ஒன்றுக்கொன்று நேர் எதிராக முக்கோணத் தோற்றத்தில் மூன்று பெரிய சக்கரங்கள் பார்ப்போர் கண்களைப் பறிக்குந்தன்மையில் அதிவேகத்துடன் மிகப் பயங்கரமாய் சுற்றிக் கொண்டிருக்கிறதென்றும் அவைகளில் ஒன்று ஆங்கில அரசாட்சி இந்நாட்டில் எக்காலமும் நிலைத்திருக்க வேண்டுமென்று கூறிக் கொண்டே சுற்றுகிறதென்றும், அதைச்சுற்றுகிறவர்கள் ஆங்கிலேயர்களென்றும் மற்கொன்று இந்நாடு எங்களுடையது இதை ஆளும் உரிமை எங்களுக்கே உண்டு என்று கூறி அதைஅடையும் வழியில் அதிவேகமாக சுற்றுகிற சுயராஜ்ய சக்கரமென்றும், அதைச் சுற்றுகிறவர் மகாத்மா காந்தி என்றும் மற்றொன்று மக்கள் எல்லோரும் ஒன்று பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை, உரிமையில் வேற்றுமை வேண்டாம், ஜாதிச்செருக்கும் சமயப்பூசலும் இந்நாட்டில் உள்ளவரை சுயராஜ்யமில்லை யென்று கூறிக் கொண்டே அதிவேகமாக சுற்றிக் கொண்டிருக்கின்ற சுயமரியாதைச் சக்கரமாகும் என்றும் இதைச் சுற்றுகிறவர்தான் ஈ. வெ. ராமசாமிப்பெரியார் ஆவர் என்றும் இதுவே நமது நாட்டின் தற்கால உண்மை நிலையாகும் இந்நிலையில் மக்கள் தங்கள் பகுத்தறிவை பயன்படுத்தி எது இக்காலத்திற்கு வேண்டியது என்று சிறிது யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்காமற் போகாது என்றும் பேசினார்கள். மற்றும்,

1. அன்னியர் ஆட்சிகளிலிருந்து விடுபட வேண்டியது தான்.

2. அதற்கு முன்பு சுயராஜ்யமும் வேண்டியது தான்.

3. ஆனால் அதற்கும் முன்னால் மக்கள் சுயமரியாதை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

சுயமரியாதையின்றி சுயராஜ்யம் பெறலாம் என்பது ஒரு கூட்டத்தாருடைய பகற்கனவே யன்றி வேறில்லை எனத்தக்க சான்றுகளுடன் உறுதியாகக்கூறி மேல் நாட்டு மக்களுக்கும் கீழ்நாட்டு மக்களுக்கும் உள்ள அறிவு வேற்றுமை, ஆராய்ச்சி வேற்றுமை, கல்வி வேற்றுமை முதலியவைகளைப் பற்றியும், பெண்கல்வி, பெண் உரிமை, பெண்கள் நிலை முதலியவைகளைப் பற்றியும், வாசகசாலையின் அவசியத்தைப்பற்றியும் தீண்டாமையென்பது இந்நாட்டில் நெருப்பும்எலக்ட்ரிக் பவருந்தவிர வேறில்லை யென்றும் அவைகள் தான் தீண்டுவதினால் மனிதருக்கு தீமையைத்தரும் என்றும் மக்களுக்குள்ளே தீண்டாமை யென்பது வேண்டாமையாகு மென்றும் நாட்டின் நன்மையைக் கருதுவோர் இவ்விஷயத்தில் தமது முழுகவனத்தையும் செலுத்தி தாழ்த்தப்பட்ட மக்களை தாழ்த்தப்படாத மக்களாக செய்ய வேண்டியது மிக்க அவசியமென்றும் தேர்தல் காலங்களில் நம்மவர்கள் சுயமரியாதையுடனும் பகுத்தறிவுடனும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் எல்லோரும் பத்திரிகைகள் படிக்கவேண்டுமென்றும் சுமார் 1 30 மணிநேரம் விளக்கும்வகையில் விளக்கி மிக விரிவாகப்பேசினார்கள்

பின்பு ஒரு கத்தோலிக்க வாலிபர் "மதுவிலக்கு" "உடற்பயிற்சி" என்பது பற்றி 15 நிமிடம் தெளிவாகப் பேசினார்கள் தலைவர் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் மற்றுஞ்சில கொள்கைகளைப் பற்றி விரிவாகக் கூறி நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் எடுத்துக்காட்டி சீர்திருத்த வாசகசாலையாருக்கு நன்றி கூறினார். வாசகசாலை அங்கத்தினர்கள் தலைவர் அவர்கட்கும் சொற்பொழிவாளர்கட்கும் வந்திருந்தோரனைவர்கட்கும் நன்றி கூறி வாசகசாலையில் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலியவைகளை வழங்கிய பின்னர் படத்திறப்புவிழா இனிது நிறைவேறி கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது கலைந்தது.

[ஒரு நிருபர்]

---

## பாதிரிகள் பஹிஷ்காரம்

மாஸ்கோ நகரத்தில் பாதிரிமார்களுக்கு தபால் பட்டுவடா செய்யக் கூடாது என்பதாக தபால்காரர்கள் தங்களது சங்கத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றார்கள்.

[14ம் பக்கத் தொடர்ச்சி]

ரபட்டணம் அமெரிக்கா. இப்பொழுது சிவபெருமான் அமெரிக்காவில் தானிருக்கவேண்டும். ஏன் மனிதனைத் தின்னும் நீக்ரோக்களை சர்வமத சபையில் ஆயிரக்கணக்கான அறிவாளிகளின் மத்தியில் நமது சுவாமி விவேகாநந்தர் கண்டு மெச்சும்படியான பிரசங்கம் செய்யும் அறிவை அளிக்கிறார்கள். நமது நாட்டில் நம்மவரையே நாமிகழ்ந்து அவர்களிடம் நன்மை பிறப்பதைத் தடுத்து கொடுமைப் படுத்தும் வழக்கமிருக்கிறவரையிலும் நாட்டுக்கொட்டை நகரத்துப் பிறபுக்கள் லெட்சக்கணக்கான பணத்தால் கோவில் கட்டி கும்பாபிஷேகத்தால் சிவபெருமானைக் கூப்பிட்டாலும் அவர் அமெரிக்காவை விட்டுவரமாட்டார். பாவம் கீழ்நோக்கும் புண்ணியம் மேல் நோக்கும் பார்ப்பானுக்குச் சோறு போட்டுத் தெட்சணை கொடுப்பது புண்ணியமல்ல. பறையனின் அறிவைத் தடுத்து அவனை அடிமை கொள்ளுவதும் புண்ணியமல்ல.

## முன்னேற்றம்.

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி இதன் வருடசந்தா ரூ. 5-0-0 அல்லது மலாய் நாட்டிற்கு டாலர் 3.

விலாசம்:— மானேஜர்,
"முன்னேற்றம்"
152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

## மேயோ கூற்று

மெய்யா—பொய்யா?

விலை அணு 4.

சி. எ. அய்யாமுத்து.
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

## நோட்டீஸ்

கோயமுத்தூர் ஜனோபகார நிதிலிமிடெட் பாங்கியில் பங்குக்காரராயிருந்து சுமார் 6 மாதத்திற்குமுன் இறந்து போன கோயமுத்தூர் வெள்ளிங்கிரிகவுண்டர் குமாரத்தியும் குட்டியாக்கவுண்டர் மனைவியுமான மல்லாயம்மாளுக்கு இந்த நிதியில் 1500 ரூ. பொருமான முழுபங்குகள் இருக்கின்றன. ஷை மல்லாயம்மாளால் ஷை நிதிக்கு பங்கு பொருப்பு கடனில அசல் ரூ. 1300 ம் அதற்கு நாளது தேதி வரை வட்டி. ரூ. 146 ம் ஜாமீன் கடனில் அசல் பாக்கி ரூ. 700 ம் அதற்கு நாளது தேதி வரை வட்டி ரூ. 83 ம் வசூலாக வேண்டியிருக்கிறது. மேற்படி மல்லாயம்மாளின் வார்சுகள் நாளது தேதியிலிருந்து ஒரு மாதவாய்தாவுக்குள் தங்களுடைய வார்சு உறிமையை சரியானபடி ரூபித்துக்கொடுத்து மேற்கணடபாக்கிகளைச்செலுத்தி பங்குகளை தங்கள் பேருக்குமாற்றிக்கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி முழுபங்குகளை 1930 ஞு ஏப்ரல் மீ 10 உ வியாழக்கிழமைகாலை 9 மணிக்கு நிதியின் ஆபீசில் பகிரங்கமாய் ஏலம் போட்டு ஏலத்தில் வசூலாகும் துகையை மேற்படி கடன்களுக்கு வஜாவைத்துக்கொண்டு மீதம் ஏதேனும் ஏற்பட்டால் அதை வார்சுதாரருக்கு கொடுக்கப்படும் அப்படி ஏலத்தில் வசூலான துகை மேற்படி கடன்களுக்கு போதாமலிருந்தால்மேற்படி மல்லாயம்மாளின் இதர சொத்துக்களின் பேரில்தொடரப்படும்.

| | |
|---|---|
| கோயமுத்தூர் 1930-ஞு மார்ச்சு 5 உ | C. G. நடராஜ முதலியார், செக்ரிடெரி. |

கோயமுத்தூர் ஜனோபகார நிதி லிமிடெட்

## ஞானசூரியன்

விலை 0-4-0 அணு.

"குடி அரசு" ஆபீஸ், ஈரோடு.

# குமரன் பிரைஸ் சீட்டு.

## குமரன் சந்தாதாருக்கு 500 ரூபாய் இனும்

—0—

நாளிது தை 10 உ முதல் பங்குனி 30 உ வரை சேரும் புதிய சந்தாதாருக்கு மட்டும்

—0—

குறிப்பிட்ட தேதிக்குள் 500 சந்தாதாருக்குக் குறையாமல் சேரக்கூடுமென் றெதிர்பார்க்கப் படுகிறது. இந்த ஐனூறு சந்தாதாரிடம் வசூலாகும் தொகையிலிருந்து எடுக்கப்படும் 500 ரூபாவுக்குப் பின்வருமாறு பிரைஸ் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் | பிரைஸ் | ரூ. | 100 |
| இரண்டாவது | ,, | ,, | 50 |
| மூன்றுவது | ,, | ,, | 25 |
| நான்காவது | ,, | ,, | 15 |
| ஐந்தாவது | ,, | ,, | 10 |
| 6 முதல் 65-வரை ரூ. 5 வீதம் சீட்டு 60. | | ,, | 300 |

நிபந்தனைகள்.

1. சுக்ல-ஞு பங்குனி-மீ 30-உக்குள் ஆபீசுக்குப் பணம் வந்து சேரவேண்டும்.

2. சுக்ல-ஞு தை-மீ 10-உ யிலிருந்து மேற்படி ஞு பங்குனி 30-உ வரை முன்பணம் செலுத்திச் சேரும் வாரப் பதிப்பு ஜீவிய சந்தாதார்களும், மேற்படி பதிப்பு சாதாரண சந்தாதார்களும் சீட்டிற் சேர்க்கப் பெறுவர். சாதாரண சந்தாதார் ஒரு வருஷ சந்தாவுக்குக் குறையச் செலுத்தினுல் சேர்த்துக் கொள்ளப் பெறமாட்டார்.

3. வி. பி. மூலம் சேரும் சந்தாதாரும் ஏற்கனவே இருந்துவரும் சந்தாதார்களும் இதிற் சேர்க்கப் பெற மாட்டார்கள்.

4. பிரமோதூத-ஞு சித்திரை-மீ 1-உ குமரனுபீசில் ஐந்து பிரமுகர்கள் முன்னிலையில் சீட்டுகள் குலுக்கி யெடுக்கப்படும்.

5. பிரைஸ் தொகையை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அவரவருக்கு மணியார்டர் கமிஷன் கழித்தும் பாக்கி நேரே அனுப்பிவிடப்படும்.

6. இந்த ஐந்து பேரிருந்து செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

7. பிரைஸ் கிடைத்தவர்கட்கும் மற்றவர்கட்கும் வழக்கம்போல் பத்திரிகை அனுப்பப்படும்.

8. புதிதாகச் சேரும் சந்தாதார் தொகை 500-க்கு மேற்பட்டால் சந்தா ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் சேர்த்து பிரைசில் பணஅவு அதிகப் படுத்தப்படும். குறைந்தாலும் அப்படியே பிரைசில் பணஅவு குறைக்கப் படும். எப்படியானாலும் குறிப்பிட்ட 65-பேருக்குச் சீட்டு விழுதல் கூடும்.

8. பிரைஸ் பெற்றவர் விபரம் சித்திரை மாத முதல் வாரக் குமரனில் வெளியிடப்பெறும்.

மானேஜிங் டைரக்டர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி.

## குமரன் வாரப் பதிப்பு சந்தா.

| | |
|---|---|
| உள் நாட்டுக்கு | ரூ. 5—0—0 |
| வெளி நாட்டுக்கு | ,, 6—0—0 |
| ஜீவிய சந்தா | ,, 100—0—0 |

இனும்! முற்றிலும் இனும்!!

## காசியில் மூன்று நாள் என்ற ஓர் இனிமையான புத்தகம்

வெளிவந்துவிட்டது

உடனே ஒரு அணு தபால் ஸ்டாம்புடன் தங்கள் முழு விலாசங்களை தெளிவாய் எழுதி அனுப்புங்கள். அடுத்த தபாலில் மேற்படி புத்தகம் தங்களுக்கு இனுமாக வந்து சேரும்.

கே. எஸ். முத்தையா அண்டு சன்ஸ்,
சில்க் ஹவுஸ், மதுரை.

# குமரன் டைரி.

(பிரமோதூத வருடம்)

விலை ரூபா ஒன்று

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி, (இராமனுதபுரம் ஜில்லா)

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த வித்யாசாலையில் ஆதிதிராவிடப் பையன்களுக்குப் பாட்டும் வைதிகக்கொடுமைகள் கள்குடியினால் வரும் தீமை இவைகளைப் பற்றி நாடகருபமாக நடித்துக் காட்ட அதற்குத் தகுந்த பாட்டும் வசனங்களும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தென்மாப்பட்டு ஆண்டு விழாவில் பாடினார்கள் நடித்தார்கள். அவர்கள் சிறுவர்கள். அதில் இரண்டு சிறுவர்களுக்குப் பல் விழுந்திருக்கிறது இன்னமும் முளைக்கவில்லை. இவர்கள் இசையும் சங்கீதத்திற்கு அமைய வேண்டிய அம்சங்கள் சுருதிகள் அவர்கள் தொண்டையிலேயே அமைந்திருக்கின்றன. பாண்டிய நாட்டின் நீட்டுத் தமிழும், சோழ தேசத்தின் அழுத்தத் தமிழும் கொங்கு நாட்டின் பழந்தமிழும் நாணும்படியாக அம்மாணவர்களின் வசனங்களிருக்கின்றன. இப்பேர்ப்பட்ட சமூகத்தை ஒன்றுக்கும் உதவாமல் நமது முன்னோர்கள் செய்துவிட்ட கொடுமைகளை நாம் நினைத்துப் பார்த்தால் நமது தலைமேல் ஏற்பட்டிருக்கும் பாவம் பெரிதிலும் பெரிதாகும். எந்தக்கண்ணால் நாம் கடவுளைப்பார்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த அன்பென்னும் கண்ணின் பார்வை ஏழைகள் பேரில் நமக்கில்லாமையாலேயே நாம் செய்யும் பிரார்த்தனை வழிபாடு முதலியவைகளுக்குக் கடவுள் செவிசாய்க்கவில்லை. நாம் தன்னயம் பொருந்திய உரிமைகளைக்காப்பதில் அதிக கருத்து செலுத்தித் தமது குழந்தைகளுக்குச் சமமான தாழ்ந்த வகுப்பினர்களிடம் காட்ட வேண்டிய தன்னயமற்ற கடமைகளை மறந்து விட்டதினாலே கடவுள் நமது தேசத்தின் பேரில் கருணை காட்டாது விட்டுவிட்டார். விஸ்தாரமான ஒரு தேசத்திலுள்ள ஒரு பெரும் சமூகத்தினருடைய அறிவையும் ஆண்மையையும் நாம் நசுக்கி விட்டதினாலேயே நமது நாடு அடிமைப்பட்டது.

ஜாதியக் கொள்கை இன்று சர்வ சம்மதமாய் தனது தன்னலம் அளவிலே பிரமாண்டமாக இருப்பது கொண்டு அதை ஒரு தர்மமென்று காட்டத்தலைப்படுமிடத்தே அந்தக் கொள்கை பிறர் சொத்துக்களையும் உழைப்பையும் கொள்ளையிடுவது மாத்திரமேயன்றி மனுஷ்ய ஜாதியின் உயிர் நிலையைத் தாக்குகிறது. தர்மவிதியைப் புறக்கணிக்கும் புத்தியை மனிதருக்கு அவசரமாகவே விளைவிக்கிறது. கவனித்துப் பாருங்கள்; ஜனம் தருமவிதியை தெய்வீகமாக எண்ண, ஜாதியான அந்தவிதியைக் காற்றிலே தூற்றிவிடுகிறது. ஜனத்தைக்காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் ஜனங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதம் கற்பித்து வந்தவர்கள் தங்கள் உயர்வின் ஆதிக்கத்தாலும் அவர்களால் சொல்லப்படும் சாஸ்திரங்களைக் கொண்டும் உழவோனுக்குப் படிப்பு வந்தால் உழவுத் தொழில் நின்று போமென்றும் பெண்ணுக்குக் கல்வி கற்பித்தால் அவளுடைய பதியும் ஈசனுமாகிய கணவனுக்கு நேரே ஆராதனை நடத்தமாட்டாளென்றும் சொல்லி வந்தது போலவே, கல்வி அறிவு பரம்பரையாய் வரவேண்டுமென்றும் திடீரென்று ஒருவனுக்குப் புகட்டினால் அவன் விர்த்தியடையானென்றும் பிறவியாலேயே கடவுளால் சண்டாளனாய்ப் பிறப்பிக்கப்பட்டவனென்றும் அவனுக்குக் கல்வியைப்புகட்டுவது பாவமென்றும் அதனால் தெய்வகோபம் உண்டாகுமென்றும் போதித்தார்கள்.

அதைக் கேட்டு வந்த உயர்குடி பிறப்பும் செல்வச் செருக்குமுள்ள நமது நாட்டு முன்னோர்கள் ஏழை ஜனங்களைத்தாழ்த்தி காலால் மிதித்து வருத்தினார்கள். அவ்வேழைகளும் இந்தக் கொடுமைக்கு வெருநாளாக உள்பட்டு ஆதரவற்று வலியற்று ஒளி மழுங்கி தாம் மானுட ஜென்மம் என்பதைக்கூட மறந்து விட்டார்கள். நமது முன்னோர்கள் பல நூற்றாண்டுகளாக நிர்பந்தித்த படியால் அவர்களும் தாங்கள் அடிமைகளாகவே பிறந்தவர்களென்று நம்பியிருந்தார்கள். நம்மவர்கள் நமது பழய சாஸ்திரக் கல்வியிலும் இக்காலத்து இங்கிலீஷ் பட்ட முத்திரையாலும் இரண்டும் சேர்ந்த பண்டிதத் திறமையிலும் எவ்வளவோ தேர்ந்தவர்கள் என்று பெருமை பாராட்டிக் கொண்டு தன்னையும் மனித்த் தன்மையுடையவரென்று மதித்துப் பெருமையடித்துக் கொண்டாலும் இந்த காலால் மிதிபட்டு வருந்தும் ஏழைகளுக்குக் கைகொடுத்துத்தூக்கி விட்டவர்களல்ல. இவ்வாறு இருக்கும் நமது கொடுமையைப் போக்க மகமதிய படை எடுப்பை தெய்வம் நமது நாட்டிற்கு அனுப்பிற்று. அதிலும் தெய்வம் திருப்தியடையாமல் அதற்குப் பின் கிருஸ்துவப் பாதிரிகளை அனுப்பி அதிலும் நாம் ஒவ்வொரு காலத்திலும் மனுஷ்ய ஜாதி கற்றுக் கொள்ள வேண்டிய பெரிய உண்மைகளை கற்றுக் கொள்ளாததினால் பின்னும் அந்தத்தெய்வம் காலசக்தியின் தூதாகப் பிரிடிஷ் ஜாதியின் அரசாட்சியைநமக்களித்தது. பிரிடிஷ் அரசாங்கத்தை நடத்தும் பெரிய ஆங்கிலேயர் நியாயம் உண்மை விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகிறவர்களென்றும் அவர்களுடைய இலக்கியத்திலும் இதிகாசத்திலும் அவைபல வகைகளில் காட்டப்படுகின்றனவென்றும் அவர்களுடைய வாழ்க்கைகள்தமதுசரித்திரத்தின் மூலமாக மாதியும் விசாலமெய்தியும் வருகின்றனவென்றும் தமது சித்தத்தை ஆத்மபலியென்ற ஒளியினால் துழாவி அவ்வொளியால் மனுஷிய சாஸ்திரத்தை புதுமாதிரி வாசிக்கப்பட்டவர்களென்றும் கடவுளுக்கு மனுஷியப் பசுக்களைப் பலியிட்டால் தெய்வத்திற்குக் கோபமுண்டாகுமென்பதைக் கற்றுக் கொள்ளுகிறவர்களென்றும் பிரிட்டிஷ் ராஜ்யக் கொள்கையானதுபிறப்பிடத்தையும் நிறத்தையும் பொருட்டாக்காமல் எல்லோரும் தன் பக்கம் சேரும்படி கூவி அழைக்கிறதென்றும் சொல்லுவதை இனியும் தெளிவுபடுத்த இப்பொழுது காலியாகப் போகும் நீதியிலாக்காவின் பெரிய உத்திபோகப்பதவியை எம். சி. ராஜா அவர்களுக்குக் கொடுப்பார்களென்று ஆறு கோடி மக்களல்லாமல் நமது நாட்டிலுள்ள ஜனசமூகக் கொடுமை நீங்க வேண்டுமென்று நினைக்கும் அனேகர்களும் நம்புகிறார்கள். நீதியும் சத்தியமும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் விளங்காவிட்டால் இனி எந்த ராஜாங்கத்தால் அவை நிலைநிறுத்தப்படும். அப்படியில்லாவிட்டால் அதற்காக எந்த ராஜாங்கத்தை கடவுள் சிருஷ்டிப்பாரோ யாமறியோம்.

நமது பாவத்தைப் பரிகரிக்க தெய்வத்தால் அனுப்பப்பட்ட பல ராஜாங்கத்தினிடமும் அந்தச் சமூகத்தினிடமும் நம்மால் தாழ்த்தப்பட்டவர்கள் போய்ச் சேர்ந்தார்கள், சேர்ந்தவர்களையெல்லாம் ஆதரித்து எல்லாவித சுவதந்திரமும் கொடுததார்கள். அதனால் அவர்கள் சமூகங்களைப் பெருக்கினார்கள். அவர்களைக் கண்டு நாம் அஞ்சுகிறோம். சத்தியமும், வீரமும் உடைய ஜாதியாரை வெளியில் ஓட்டி அவர்கள் அன்னியமதஸ்த்தராய் விட்டால் சத்தர்களாக அங்கீகரிக்கிறோம். நமது சமூகத்திலோ வீரமும் போர்க்குணமுள்ளவர்கள் குறைந்து போகிறார்கள். அவர்களை நீக்கி புத்தியாலும், தந்திரத்தாலும் தெய்வமென்றும், சமயமென்றும் ஏமாற்றிப் பிழைக்கும் கோழைகளின் கூட்டம் போட்டியான இந்த உலகத்தில் சத்திரத்துச்சோற்றிற்கும் தலைவிதியென்று கோர்ட்டில் வீரம்பேசிக் கொள்ளுவதற்கும் உபயோகப்படுமேயல்லாமல் குடியிருப்பு வசதிக்கும்கோவிலுக்கும் அதிலுள்ள தெய்வங்களுக்கும் குருக்களுக்கும் வைதீகப் பாரமார்த்திகளுக்கும் உபயோகப்படாதே, இதுவரையிலும் உபயோகப்படவுமில்லையே. சுவாமி விவேகாநந்தர் கும்பகோணத்தில் செய்த பிரசங்கத்தில் சொன்னதைச் சொல்லி இந்த வியாசத்தை முடித்துக்கொள்ளுகிறேன். "கல்வியறிவு பாம்பரையாய் வாவேண்டுமென்றும் திடீரென்று ஒருவனுக்கு அதைப்புகட்டினால் அவன் விர்த்தியடையானென்றும் வாதம் செய்கிறார்கள். அது உண்மை அல்லவென்பதற்கு என் கண்ணால் கண்ட ஒரு நிதர்சனம் கூறுகின்றேன் கேளுங்கள். அமெரிக்காவில் நடந்த சர்வமத சபைக்கு வந்திருந்த பலருள் ஒரு நீக்ரோ ஜாதி இளைஞனும் வந்திருந்தான். அவன் நாகரீகமற்ற ஆப்பிரிக்கா கண்டத்திற் பிறந்த நீக்ரோவன். அவன் அந்த சபையில் அழகிய பிரசங்கமொன்றுசெய்தான். அது முதல் அவனிடத்தில் நான் குதூகலங்கொண்டு அடிக்கடி அவனுடன் பேசினேன். ஆனால் அவனைப்பற்றி யாதொரு சங்கதியும் தெரியவில்லை. பிறகு சில நாள் கழித்து நான் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது சில அமெரிக்கர்களைக் கண்டு பேசிக் கொண்டிருக்கையில் அந்த நீக்ரோவனைப்பற்றி இவ்வாறு அவர்கள் சொன்னார்கள். அதாவது இந்தச்சிறுவன் ஆப்பிரிக்காக் கண்டத்தின் மத்தியப் பிரதேசத்திலுள்ள ஒரு நீக்ரோ தலைவனது மகனென்றும் ஒரு நாள் இன்னொரு தலைவன் இவன் தகப்பனையும் தாயையும் கொன்று தின்றுவிட்டு அந்தப் பையனையும் கொல்ல உத்திரவு செய்ய இந்தப் பையன் அதைத் தெரிந்து ஊரைவிட்டு ஓடிப்போய் பல்லாயிரம் மைல் தூரம் நடந்து எத்தினையோ கஷ்டங்களை அனுபவித்து கடற்கரையடைந்தானென்றும் அங்கே வந்திருந்த அமெரிக்கக் கப்பலொன்று அவனை ஏற்றிக்கொண்டு அமெரிக்கா கொண்டுவந்து சேர்த்ததென்றும் சொன்னார்கள். இந்தப் பையன் தான் அந்தப் பிரசங்கத்தைச் செய்தான். அப்படி இருக்க நீங்கள் சொல்லும் பரம்பரா வாசனைவாதத்தைப் பற்றி நான் யென்னவென்று நினைப்பது? ஏ பிராமணர்களே! உயர்ந்த ஜாதியென்று சொல்லிக் கொள்ளும் ஜாதி அபிமானிகளே !! பிராமணனுக்கு பரம்பரா வாசனையின் காரணமாகப் படிப்பில் பறையனுக்கிருப்பதைவிட அதிக ஊக்கமிருக்குமாயின் பிராமணன் படிபபிற்காகக் கொஞ்சம் கூடச் செலவிட வேண்டாம். அதையெல்லாம் பறையனுக்கே செலவிடுங்கள். இல்லாதவர்களுக்குக் கொடுங்கள். ஏனெனில் அவர்களுக்குத்தானே அந்தக் கொடை அதிகமாகவேண்டியிருக்கிறது. பிராமணன் பிறப்பிலேயே கெட்டிக்காரனாக விருப்பானாகில் அவன் யாதொரு சகாயமுமின்றித் தானே கற்றுக்கொள்ளுவான். மற்றவர்கள் அவ்வாறு கெட்டிக்காரராய்ப் பிறவாத பட்சத்தில் அவர்களுக்கே எல்லாக் கல்வியையும் அளியுங்கள். இது ஞாயமென்றும் யுக்தமென்றும் எனக்குத் தோன்றுகிறது." ஆகவே மேற் ஜாதியாரின் காலின் கீழ் அகப்பட்டு நசுங்கும் எந்த ஏழைகளுக்கும் அவர்களின் உண்மை நிலை இன்னதென்று சொல்லவேண்டியிருக்கிறது. பலமுள்ளவர்களுக்கும் பலவீனர்களுக்கும், மேலோருக்கும் கீழோருக்கும், எல்லாருக்கும் பொதுவில் ஒரே அநந்தாத்மாவான பரம்பொருள் சாட்சியாய் விளங்கி நற்பதவியும் உயர்நிலையும் அடைவதற்கு எல்லாருக்கும் அதிகாரமுண்டென்பதை வெளிப்படுத்துகிறதென்ற சங்கதியை ஒவ்வொருவரும் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் குழந்தையாகவிருந்தாலும் ஜாதி, படிப்பு, பலம், பலக் குறைவு என்ற வேற்றுமையின்றி எல்லாரும் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். நாமும் அதைத் தெரிந்து தாழ்த்தப்பட்டவர்களின் அறிவைக் கெடுக்காமல் அவர்களின் அறிவுவிர்த்திக்காக ஏற்பட்ட நாச்சியார்புரம் கல்விச் சாலைக்கு உதவிபுரிவோமாக.

நமது சிவபெருமான் குபேரனுக்கு அதிக சிநேகம். இப்பொழுது குபே

[தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க]

# தாது புஷ்டிக்கு

## தங்கபஸ்பம் மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா.

### இழந்துபோன ஆண்மையைத் திரும்பக்கொடுக்கும் இல்லற வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

மேக ரோகம் கொடிய வியாதி இல்லாதவர்கள் தாதுபுஷ்டி, சரீரதிடம் அடைய தங்க பஸ்பத்தையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும், தங்கபஸ்பமும் 100-நாள் மருந்து ரூபாய் 50. 50-நாளைக்கு ரூபாய் 25. 26-நாளைக்கு ரூபாய் 12—8—0

## கிருஷ்ணலீலா காமகேசரி குளிகை

### தாதுபுஷ்டிக்கு இதற்கிடு ஒன்றுமில்லை.

பிரபுக்களுக்கு 100 குளிகை ரூபாய் 20. மற்றவர்களுக்கு 100 குளிகை ரூபாய் 10.

### ஒரு அஸிஸ்டென்ட் ஸர்ஜன் புகழ்வதைக் கவனியுங்கள்

தங்களின் அருமையும் பெருமையுமான தங்கபஸ்பமும் சாலாமிசிரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்குக் கொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சு போல் பறந்து போய் விட்டது. இப்பொழுது அவர் நல்ல திடதேகியாய் இருக்கிறார். ஆகையால் அடியிற் கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பர பஸ்பம் 80 வேளை ரூ. 40. தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ரூ. 5. நாசிங்க லேகியம் தங்கபஸ்பம் ரூ. 50. தபால் செலவு ரூ. 2 ஆக ரூ. 97-க்கு வி. பி. செய்யவும். 19—1—25

ம ா-ா-ஸ்ரீ வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள் யாவும் நோயாளர் யாபேருக்கும் சுகத்தையும் மனதிருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அநேகருக்கு அனுபோக அத்தாட்சியுடன் எடுத்துக்காட்டியிருக்கிறேன் தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும்விளங்கச் செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நாசிங்க லேகியம், பவள பஸ்பம், தங்க பஸ்பம் இவைகளை வி. பி. செய்யவும். (ரூ. 238—0—0-க்கு) வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது.

P. Nagalingam Hospital, C/o District Hospital, Kualaselenger.

## நற்சாக்ஷி.

## புத்திர சந்தானம் உண்டாகி விட்டது.

ஐயா, எனது நண்பர்களில் ஒருவர் ஆண் தத்வம் சிறிதுமின்றி மனவருத்தத்துடனிருந்தார். அநேக வைத்தியர்களால் கொடுக்கப்பட்ட பல மேல்பூச்சி மருந்துகள் உபயோகித்தும், அநேக மருந்துகள் சாப்பிட்டும், கொஞ்சம்கூட குணமாகவில்லை. தங்கள் மேன்மை பொருந்தியதும், உயர்ந்த பலனைக் கொடுக்கக்கூடியதும், மதிப்பிட முடியாததுமான தங்க பஸ்பம், மகாமன்மத காமகேசரி சலாமிசிரி அல்வா 50-நாள் மருந்தும், கிருஷ்ணலீலா காமகேசரி குளிகை 100-ம் தருவித்து 15 நாள் சாப்பிட்டதில் பெருமை பாராட்டத்தக்க புதிய சக்தியையும் 10 மடங்கு ஆண்மையையும் கொடுத்து விட்டது. மேற்படி வியாதியஸ்தர் பூரா மருந்தையும் சாப்பிட்டதில் தனது இழந்துபோன ஆண்மைத்தனம் பூராவையும் பெற்றுவிட்டார். இப்பொழுது ஒரு ஆண் குழந்தையை அடைந்திருக்கிறார். தங்கள்ஞாபகச்சின்னமாக மேற்படி குழந்தைக்கு "வேலுசாமி" என்கிற தங்கள் நாமத்தையே சூட்டி அழைத்து வருகிறார்.

10—1—29 V. S. NATANAM, Sub Inspector of Police, South Arcot Dt.

## வைத்திய ஆசிரியர் :

## ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

தந்தி விலாசம் "வேலுசாமி" பழனி. சித்த வைத்தியசாலை, பழனி. S I Ry

## குடி அரசு புத்தகாலயம்.

| | |
|---|---|
| மேயோ கூற்று மெய்யா பொய்யா | 0—4—0 |
| ஞானசூரியன் ... | 0—4—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| மனு நீதி மருமம் ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. ... | 0—2—0 |
| திருகுரள் ... | 0—8—0 |
| திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டு சொற்பொழிவு ... | 0—2—0 |

8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**

ஈரோடு

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சிமுறையும்.



விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மென்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

(11) மைலாப்பூர், சென்னை

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சோதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிலேஷ்மம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூச்சடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 15 நாள் ஒரு டின். 1 டின் உபயோகிக்கக் கூடியதன் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0 6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.

F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.

இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

## சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அநுமதிக்கப்பட்ட மூலதனம் | ...ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275, |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன்பீச், சென்னை.

# தமிழரசு.

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனும்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.

உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலயம்,

31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

## அடுத்த ஜென்மம் என்பது முடிச்சுமாறிகள் பேச்சு.

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிட்டப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.